# களத்தில்



ஒரு கரும்புலிவீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கின்றான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்த குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது; நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்கவேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

(01.07.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (189) அன்பளிப்பு : 60 p

# கரும்புலிகள் நாள் 1999




## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# ஐ.நா.வின் கவனத்திற்கு



ஐக்கிய நாடுகள் சபை உலகின் மதிப்புக்குரிய சர்வதேச நிறுவனம். ஐக்கிய நாடுகள் சபை தொடங்கப்பட்டதன் முதன்மை நோக்கங்கள் நான்கு என ஐக்கிய நாடுகள் சபையின் சாசன முகவுரை தெளிவாக கூறுகின்றது.

★ யுத்தத்தின் கொடூரங்களால் மனித சமூகம் துக்கங்களை துயரங்களையே தனது வாழ்வாக அனுபவிப்பதை தடுப்பது

★ சிறிய பெரிய தேசஇனங்களதும் ஆண் பெண்ணினதும் சம உரிமைகளைப் பேணுவதன் அடிப்படையில் மனிதனது தன்மானத்தையும் சுய மரியாதையையும் போற்றிப் பேணுவதற்கு ஏற்ற வகையில் அடிப்படை மனித உரிமைகள் மேலான நம்பிக்கையினை மீள் உறுதி செய்வது.

★ சர்வதேச சாசனங்கள் மற்றும் சர்வதேச சட்டங்களை மதித்து அதற்கு கட்டுப்பட்டு நடப்பதினை நீதி நிலைவுவதற்கான நிபந்தனைகளாக கருதி அவற்றை ஏற்படுத்துவது

★ சமூக முன்னேற்றங்களையும் வாழ்க்கைத் தர உயர்வுகளையும் ஏற்படுத்துவதன் மூலம் பெரிய அளவில் சுதந்திரமாக வாழ்வதை வளர்ப்பது.

என்பவற்றை தனது முகவுரையின் தொடக்கமாக கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை 'ஐக்கிய நாடுகள் சபையின் மக்களாகிய நாம் இவற்றை அடையத் தீர்மானித்துள்ளோம்' என்னும் உறுதி மொழியுடன் திகழ்கிறது. இதில் முக்கியமான அம்சம், அரசுகள் அல்ல மக்களே ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பினை தோற்றுவிக்கின்றனர். அம்மக்களின் சட்டப்படியான பிரதிநிதிகளாகத் திகழும் தேச அரசுகள் அம் மக்களின் சார்பாக ஐக்கிய நாடுகள் சபையில் அவர்களின் விடயங்களை கையாளும் பிரதிநிதிகளாகத் திகழ்கின்றனர். ஆனால் ஒரு அரசாங்கம் தனது மக்களாக கூறிக் கொள்பவர்களுக்கு பாதுகாப்பையும் அமைதியையும் வழங்க அக்கறையற்றதாக மாறும் பொழுது அப்பாதிக்கப்பட்ட மக்களின் பிரிக்கப்பட முடியாத பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் தங்களது அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிப்பதனை அனுமதித்து அதற்கு ஆவனசெய்ய வேண்டிய பொறுப்புவாய்ந்த நிறுவனமாகவும் ஐக்கிய நாடுகள் சபை திகழ்கின்றது.

இலங்கைத்தீவின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமது அரசினைக் கொண்டு திகழ்ந்து பிரித்தானிய காலனித்துவ அரசினால் இலங்கை அரசாங்கம் என்ற ஒற்றையாட்சிக்கு உட்படுத்தப்பட்ட தமிழீழ மக்கள் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் உருவாக்கிய சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் தமக்கு பாதுகாப்பையும் அமைதியையும் அளிக்க அக்கறையற்ற அரசாக மாறிய வரலாற்று அனுபவங்களூடாக தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தங்களது அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்க தீர்மானித்து அதனைக் குடியொப்பத்தின் மூலம் அங்கீகரித்து தமது தமிழீழ அரசை மீள நிறுவுதற்கான அரசியல் வழிகளில் இறங்கினர். இதனை ஏற்க மறுத்து தமிழீழ மக்கள் மீதான யுத்தத்தின் மூலம் அவர்களது தாயகத்தை ஆக்கிரமித்து அவர்களது அரசியல் பணிவை தமதாக்கி அவர்கள்மேல் தமது இறைமையைத் திணிக்கும் சர்வதேசக் குற்றச் செயலில் இறங்கியுள்ள சிறீலங்கா தமிழீழ மக்கள்மேல் மனிதாயத்திற்கான பல குற்றச் செயல்களை தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றது. இதனால் உலகின் காணாமல் போனவர்களை அதிகம் கொண்ட நாடுகள் வரிசையில் பதியப்பட்ட எண்ணிக்கைகளின் அடிப்படையில் இரண்டாவது இடத்தையும் பதியப்படாதவர்களையும் சேர்த்துப் பார்ப்பின் முதலாவது இடத்தையும் வகிக்கும் அரசாங்கமாக சிறீலங்கா திகழ்கிறது. சிறீலங்கா தமிழீழ மக்கள்மேல் நடாத்திவரும் யுத்தம் இனஅழிப்பு நோக்கிலானது என்பதை மேலும் தெளிவாக்கக் கூடிய சான்றுகளாக செம்மணி முதல் தமிழீழத்தின் பலபகுதிகளிலும் சிறீலங்கா அரசாங்கம் கொன்றும் உயிருடனும் புதைத்த தமிழ்ப் பொது மக்களின் புதைகுழிகள் குறித்த உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இவ்வாறு இனஅழிப்பு மூலம் தமிழ் மக்களின் அரசியல் பணிவைப் பெற்று அவர்கள் மேல் தமது இறைமையைத் திணித்தல் என்னும் அரசியல் நோக்குடன் செயற்படும் சிறீலங்கா இதனை அமுலாக்குவதற்கான பொறுப்பினைத் தனது ஆயுதப்படைகளிடம் ஒப்படைத்துள்ளது. இதனால் அனுதினமும் தமிழ் மக்கள் பலவிதமான இனஅழிப்புக்களையும் இனத்துன்புறுத்தல்களையும் அனுபவித்து வருகின்றனர். இவ்வாறு தமிழ் மக்கள் மேல் இனஅழிப்பு நடாத்தி வரும் சிறீலங்கா ஐக்கிய நாடுகள் சபைக்கு மதிப்பளிக்காத அதன் உறுப்பு நாடாக இலங்குகிறது.

இந்த ஐக்கிய நாடுகள் சபைக்கு மதிப்பளிக்காத சிறீலங்கா அரசாங்கத்தின் செயல்களின் வரிசையில் ஒன்றாக ஆனி 26ம் நாள் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச சித்திரவதைகள் தினத்தை அனுசரித்த கௌரிதாசன் என்னும் தமிழ் இளைஞன் சிறீலங்கா படையினரால் கூட்டம் முடிந்ததும் முடியாததுமாக கைதாக்கப்பட்ட சம்பவம் அமைகிறது. இந்த தமிழ் இளைஞன் சத்துருக்கொண்டனில் 150 தமிழ் மக்களின் இன்னுயிர்களைப் பறித்து சிறீலங்கா நடாத்திய இன அழிப்பில் பாதிப்புற்று தனது குடுப்பத்தவரைப் பறிகொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இவ்விளைஞன் தான் பாதிப்புற்ற வரலாற்றை கூட்டத்தில் எடுத்துரைத்தார் எனவும் அதனை குற்றச் செயலாக கருதியே இவரை சிறீலங்காப் பாதுகாப்புபடை அதன் துணைப்படையான புளட்டின் நெறிப்படுத்தல் உடன் கைதாக்கியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அன்றைய தினம் சிறீலங்கா அரசாங்கத்தின் இனத்துன்புறுத்தல் இனஅழிப்புச் சித்திரவதைகளினால் பாதிப்புற்ற பலநூற்றுக்கணக்கான மக்கள் குறிப்பாகப் பெண்கள் சர்வதேச சித்திரவதை எதிர்ப்பு நாள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளுமான இத் தமிழ் மக்கள் வில்லன் ஓல்ட் ஹாலை சென்றடைந்ததும் அங்கு கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் கலந்து கொண்டு தன் குடும்பத்தவர்க்கு சத்துருக்கொண்டன் இனஅழிப்பில் ஏற்பட்ட துயரத்தை பகிர்ந்து கொண்டமைக்காகவே இவ்விளைஞன் இவ்வாறு சிறீலங்காப் படையாலும் அதன் துணைப்படையான புளட்டினாலும் கைதாக்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவமானது சர்வதேச சட்டங்களையும் ஐக்கிய நாடுகள் அமைப்பையும் தொடர்ந்தும் தொடர்ந்தும் அவமதிக்கும் சிறீலங்காவின் போக்கையும் அது தன் படைகளையும் தமிழ்க் குழுக்களையும் கொண்டு தமிழ் மக்கள் மேல் நடாத்தி வரும் இராணுவ வெறியாட்டத்தையும் உலகிற்கு மீளவும் நிரூபித்துள்ளது. இந்த படைகள் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வெளியேற்றப்பட்டாலே தமிழ் மக்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வைப் பெறமுடியும் என்ற இயல்பான உண்மை மீண்டும் உறுதியாகியுள்ளது.




இதற்கு உதவவேண்டிய பொறுப்பினை ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றுவதில் காட்டும் காலதாமதங்கள் தமிழ் மக்கள் மீதான சிறீலங்காவின் இனஅழிப்புக்கு உலகு வழங்கும் மறைமுக ஆதரவாக திகழ்கின்றது. அதிலும் சிறீலங்கா உணவை ஆயுதமாகப் பயன்படுத்துவதையும் தமிழ் மக்கள் மீதான முற்றுகையையும் ஐக்கிய நாடுகள் சபை தடுத்து நிறுத்துவதில் காட்டி வரும் அசிரத்தை தமிழ் மக்களது உயிர் உடமை மனித உரிமைகள் மீதான அச்சுறுத்தல்கள் வலுப்படுவதை வேகப்படுத்தி வருகிறது. இவை ஐக்கிய நாடுகள் சபை மீதான மக்களின் நம்பிக்கைகளை சிதறடிப்பதும் அல்லாமல் ஐக்கிய நாடுகள் சபை எந்த நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளதோ அந்த நோக்கங்களையே அதன் மக்களான தமிழீழ மக்களுக்கு மறுப்பதாகவும் அமைகிறது. ஆதலால் மனித உரிமை எந்த அளவுக்குப் பேணப்படுகிறது என்பதை அரசாங்கங்களின் ஜனநாயகத் தன்மைக்கு அளவீடாக கருதும் ஐக்கிய நாடுகள் சபை சிறீலங்கா அரசாங்கம் ஜனநாயகத் தன்மையற்ற அரசாங்கம் என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டிய நேரம் இது.

சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ மக்களுக்கு பாதுகாப்பும் வழங்க ஆற்றல் அற்ற அரசாங்கமாக இருப்பதினால் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அதன் அடிப்படையில் அவர்கள் தமது தமிழீழத் தாயகத்தை மீள அமைத்து வாழ எடுக்கும் வாழ்தலுக்கான முயற்சிகளையும் ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்க வேண்டும். இந்த கடமையினை ஐக்கிய நாடுகள் சபை செய்வதற்கு அதனை உரிமையுடன் கேட்க வேண்டியவர்களாக புலம் பெயர் தமிழீழ மக்களாகிய நாம் உள்ளோம். இதற்காக உழைப்புடன் எமது மக்களின் துயர் பகிர்வு நடவடிக்கைகள் அனைத்திலும் நாம் பங்கேற்று அவர்கள் உயிர் வாழவும் எமது தேசத்தை மீட்டெடுக்கவும் இரு தளப்பட்ட நிலைகளில் நிதியும் துணையும் அளிக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம். எமது வானிலும் சர்வதேச வானிலும் எமது தேசமக்களின் தேவைகள் விரைவில் நிறைவேற நாம் நிதியளித்தும் உடன் உதவிகள் செய்தும் முன்னுதாரணங்களாகத் திகழ்வோம்.

| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris. | TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| **NETHERLANDS** | **NORWAY** | **SWITZERLAND** | **SWEDEN** | **UNITED KINGDOM** | **U.S.A** |
| TCC<br>Grt. Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg. | TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |



# தேசத்தின் காவலர்கள்



## போர் நுட்பம், வீரம், அர்ப்பணிப்பு, மனிதாபிமானம், என்பனவற்றின் சமகாலக் குறியீடு கரும்புலிகள்

சமீபத்தில் சிறீலங்காவில் வெளிவந்த இரு ஆய்வுகள் பல ஆய்வாளர்களது மனக்கிடக்கையை வெளியே இழுத்து வந்தது. தமிழர்களின் போரியல் நுட்பங்களும், பலமும் சிங்கள பேரினவாத இயந்திரத்தின் அரசியல் இராணுவ ஆளுமையை சிறுகச் சிறுகச் சிதைத்து ஒரு தனித்துவமான தமிழர் ஆளுமைப்பரப்பு (அரசியல், இராணுவ, இராஜதந்திர) விடயங்களில் ஏற்பட்டுள்ளமையை இவ் ஆய்வுகள் காட்டுகின்றன.

சர்வதேச கல்விக்கான பண்டாரநாயக்கா மையத்தில் இடம்பெற்ற ஆய்வரங்கொன்றில் உரையாற்றிய றோகான் குணரட்ண புலிகள் பற்றிய இராணுவ மதிப்பீடொன்றை நிகழ்த்தினார். இவர் புலிகளின் அரசியல் ஆளுமைபற்றி சந்தேகங்கள் கொண்டிருப்பினும் இராணுவ ஆற்றல் பற்றிய பிரமிப்பை வெளிப்படுத்தினார். ஒரு கெரில்லா இராணுவமாக இருந்து கொண்டு புலிகள் வெளிப்படுத்தும் இராணுவ ஆற்றல் இன்றைய உலகில் எவ் விடுதலை இயக்கங்களாலும் வெளிப்படுத்தப்படாதது என்றார். புலிகளிடம் கரையோரக்கடல், ஆழ்கடல் கடற்பலம் உண்டு; விமான எதிர்ப்புத் திறன் உண்டு; ஆரம்பக் கட்டங்களிலான விமானப்பலம் உண்டு; புலிகள் மரபு ரீதியான இராணுவமாகமாறி வருகின்றார்கள் எனச் சுட்டிக்காட்டிய அவர் 1999 ஜனவரிவரை 185 தற்கொடைத் தாக்குதல்களை தரையிலும் கடலிலும் புலிகள் நடாத்தியுள்ளனர் என வியந்தார்.

தனது ஆய்வின் மையமாக அண்மையில் சிறீலங்காவுக்குப் பயணம் செய்த உலகப் போரியல் நிபுணரான ஜெராட் செலியான் (பிரான்சு) என்பவர் புலிகள் பற்றித் தெரிவித்த கருத்தை இவர் சுட்டிக்காட்டினார். உலகின் இருபெரும் விடுதலை இயக்கங்களான வியட்நாமின் வியட்கொங்கிற்கும் (Viet Cong) எரித்திரியாவின் ஈ.பி.எல்.எவ். இற்கும் ஈடான இராணுவ பலத்தை புலிகள் கொண்டுள்ளனர் என ஜெராட் செலியான் அபிப்பிராயம் தெரிவித்தார். இவ் இரு விடுதலை இயக்கங்களும் தமது அரசியல் இலட்சியத்தை வென்று விட்டன என்பதை றோகான் குணரட்ண அச்சத்துடன் சுட்டிக்காட்டினார்.

சிறீலங்காவின் இராணுவப் பலத்திற்கு ஈடாக புலிகளின் இராணுவ பலம் வளர்ந்து வருகின்றது; வன்னியில் சிறீலங்காவுக்கு ஈடாக போர் புரியும் ஆற்றலை புலிகள் கொண்டுள்ளனர்; எனவே எமக்கு ஒரு பாதுகாப்புக் கொள்கை (Security Policy) தேவை என பிறிதொரு ஆய்வாளரான கொடகே பகிரங்கமாக குரல் எழுப்பியுள்ளார்.

இவ்விரு கருத்துக்களும் தமிழீழ விடுதலைப்போரின் ஆழ பரிணாமம் பற்றிய விழிப்புணர்வு (அல்லது அச்சம்) சிங்களத் திடம் ஏற்பட்டுள்ளதை சுட்டிநிற்கிறது.

சமகால உலகின் போர் வரலாற்றில் புலிகளின் போர் முறைகளும் நுட்பங்களும் தனித்துவமானதாக இருக்கின்றது. பலமான எதிரிகளின் உச்ச இராணுவப் பிரயோகத்தினை எதிர்த்து சின்னஞ்சிறிய தேசிய இனத்தின் கால்களில் நின்று பிரபாகரன் நடாத்தும் விடுதலைச்சமர் இத் தனித்துவத்தை அடையாளம் காட்டுகின்றது.

சிறீலங்கா தனது மொத்த உள்ளூர் உற்பத்தியளவின் 164சத வீதத்தை போரிற்கு செலவிடுகின்றது. உலக இராணுவக் கல்லூரிகளில் உயரதிகாரிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். தரை - கடல் - வான் போரிற்கான பலவித நவீன ஆயுத தளவாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. படிப்படியான இராணுவ விஸ்தரிப்பு புலிகளுக்கு கால அவகாசத்தைக் கொடுத்து விடும் என்பதால் அதிதுரித விஸ்தரிப்புக்கள் (பலப்படுத்தல்கள்) சந்திரிகா அரசால் மேற்கொள்ளப்பட்டன. புலிகளின் இராணுவ, பொருளாதார, அரசியல் பலத்தை உடைத்துவிடலாம் என்ற நோக்கில் யாழ். குடாநாட்டில் குடிமனைகள் நடுவே சந்திரிகா போரை நடாத்தி ஆக்கிரமிப்பை மேற்கொண்டார்.

இக் கணிப்பீடுகள் அனைத்தையும் எமது தேசியத் தலைவரின் திட்டமிட்ட தூரப்பார்வை கொண்ட அரசியல் - இராணுவ அணுகுமுறை சிதைத்தது.

படிப்படியாக ஒரு பலம் வாய்ந்த விடுதலை இராணுவத்தை எமது தேசியத் தலைவர் கட்டி எழுப்பினார். மரபு வழிப்போர் ஆற்றல் உருவாக்கப்பட்டது, ஆயினும் இவ் இராணுவ பலத்தின் மையமாக போர் நுட்பமும், உயரிய அர்ப்பணிப்பு உணர்வும் தேசம் மீது பாசமும் கொண்ட மேன்மையான கரும்புலிகள் விளங்கினர். கரும்புலிகள் விடுதலைப்போரின் மிக சிக்கலான வேளைகளில்கூட தமிழர்களின் போர் ஆற்றலை பேணி, அரசியல் நிலைப்பாட்டை பாதுகாக்கும் உயரிய பணியின் “முன்னரங்காக” திகழ்ந்தனர்.

இன்றைய தமிழர் போர்ஆற்றல் மிகக் கடுமையான எதிர்ப்புக்கள் மத்தியில் பேணப்பட்டு வளர்க்கப்படுவது. நியாயமான அரசியல் இலட்சியத்தின் துணை இருந்தும் கூட உலக அரசியல் உறவுகள், பிராந்திய நலன்கள் போன்றன இக்கடுமையை மேலும் தீவிரப்படுத்துகின்றன. இக்கடுமைகள் மத்தியில் தமிழர்களின் விடுதலைக்கான பாதையில் உள்ள “தடை அகற்றும்” அர்ப்பணிப்பை கரும்புலிகள் மேற்கொள்கின்றனர்.

உலக தற்கொடை இராணுவ வரலாறு என்பது போர் முனைகளுக்கு அப்பால் இடம் பெறும் நிகழ்வாகவே இருந்தது. அரசியல் பிரமுகர்களின் திட்டமிடப்படாத வெளிப்பாடாகவே தற்கொடை நிகழ்வுகள் இருந்ததாக ஒரு ஆய்வாளர் விபரிக்கின்றார். தற்கொடை வெறும் மிரட்டல் என்றும் கூட சிலர் கருதினர். ஆனால் கரும் புலிகளின் தற்கொடை இராணுவ வரலாறு போர் முனையில் தோற்றம் கொண்டது. ஒரு அரசியல் இலட்சியத்தை நகர்த்தும் வீரியத்தை வெளிப்படுத்தும் வரலாறாக இது அமைந்தது.

தரைப்போரில் மில்லர் கரும்புலிகளின் முதல் அடியை எடுத்துவைத்தார். இது கடல் போர் முனைகளில் பரவி, ஆபத்து ஏற்படும் போதெல்லாம் கரும்புலிகள் வெடித்து விதையாகி தடைகளை அகற்றியுள்ளனர்.

ஆண்களும், பெண்களுமாய் கரும்புலிகள் குண்டுகள் சுமந்து பகைமுகாமினுள் நுழைந்தும் ஆற்றிய பணிகள் வார்த்தை விபரிப்புக்கு அப்பாற்பட்டது. ஓயாத அலைகள் 2 உட்பட பல்வேறு வெற்றிகரமான பிரதான இராணுவ இலக்குகளை புலிகள் தகர்த்தபோது அங்கு கரும்புலிகள் பிரதான பங்காற்றிய வரலாறு வெளிவருகின்றது.

கரும்புலிகளை பிரபாகரனிடம் இருக்கும் உயரிய ஆயுதம் எனச்சில மேற்கு இராணுவ ஆய்வாளர்கள் விபரிக்க முற்படுகின்றனர். கரும்புலிகளின் இலக்குகள் தப்ப முடியாதவை என்ற கிலி சிங்களத் திடம் உள்ளதை பல்வேறு சிங்கள ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. கரும்புலிகள் தமிழர்களின் பலம் என்ற உணர்வு நசுக்கப்படும் தமிழ் மக்களிடம் உள்ளது என்பதை உலகளாவிய பல்வேறு தமிழர் ஏடுகள் புலப்படுத்துகின்றன.


இப்பன்முகப்படுத்தப்பட்ட விபரிப்புக்களுக்கு அப்பால் தமிழீழம் என்ற அரசியல் இலட்சியத்தை வென்றெடுக்கும் மனோநிடத்தை கரும்புலிகள் தமிழ் மக்களுக்கும், போராளிகளுக்கும் ஏற்படுத்துகின்றார்கள். தாண்டிக்குளம் சமரில் பங்கேற்ற பிரதான தளபதிகளில் ஒருவர் கரும்புலிகளுடன் இணைந்து சமர்புரியும் வாய்ப்பு தனக்கு கிடைத்தமையை ஒரு உயரிய நிகழ்வாக விபரித்திருந்தார். மறுபுறம் கரும்புலிகளின் நினைவாக இம்ரான் - பாண்டியன் படையணியினால் தயாரிக்கப்பட்ட இலக்கியப் படைப்புக்கள் போராளிகளின் மத்தியில் கரும்புலிகள் ஏற்படுத்திய உயரிய தாக்கத்தை வெளிப்படுத்தியது.

தமிழ் மக்கள் மத்தியில் கரும்புலிகள் ஒரு பௌதீக வடிவமாக மட்டும் மதிக்கப்படவில்லை. மாறாக மக்கள் மூச்சினுள் - உணர்வினுள் கரும்புலிகள் கலந்து நிற்பதை சமகால சமூக வரலாற்றினுள் அவதானிக்கலாம்.

**நாதன்**

இது ஒரு உந்து விசையாக திகழ்ந்தது. வெறுமனே மேற்குலக நிபுணர்கள் கருதுவது போன்று இராணுவ ஆற்றல் மிக்க ஆயுதமாக மட்டும் கரும்புலிகள் தமிழர்களுக்கு திகழாது தமிழ் மக்களின் அரசியல் இலட்சியத்தை பாதுகாத்து, சமூக பண்பாட்டு வாழ்வினுள் உறுதி பற்றிய விழிப்பை ஏற்படுத்தி போரை உந்தித்தள்ளும் பாத்திரத்தை கரும்புலிகள் வகித்துள்ளனர்.

உலக தற்கொடை வரலாற்றை தீவிர அடிப்படைவாதம் (Extreme Fundamentalism) என நோக்கிய ஆய்வாளர்கள் மத்தியில், அது ஒரு பலம் மிக்க எழுச்சியின் சின்னம் அல்லது கோட்பாடு என்ற உண்மையை கரும்புலிகள் தோற்றுவித்துள்ளனர்.





சிற்பிகள்

தேசச் சிற்பியில்
முத்துக்களாய்
விளைந்த
சிற்பிகளே!
அடிமை தேசத்து
அனலாய் சினந்து
சுதந்திரக் கனவின்
சுகந்தமாய் நிரவி
தேச சிற்பத்தை
செதுக்கிச் செதுக்கி
ஒலியாய் ஓசையாய்
கரைந்த நீவிர்
சிற்பிகளே.

# இனி எவ்விவது எம்முறை

**வே.பாலகுமாரன்**

"விடுதலை உணர்வே மனித வாழ்வின் சாராம்சமும் அதன் உயிர் மூச்சும் ஆகும். மனித வரலாற்றினை இயக்கும் மகத்தான சக்தியும் இதுவேயாகும்.'' இது தலைவர் அவர்கள் முன்பு கூறிய கூற்றொன்று.

இப்பொழுது கொசோவோ சிக்கலையடுத்து இராசதந்திர உலகிலே தோன்றியுள்ள குழப்பநிலையை இக் கூற்றோடு பொருத்திப் பார்க்கலாம். ஒரே ஒரு நலம் அதுவே தன்னலம் என்று செயற்படும் இராசதந்திர உலகில் வெடிப்பொன்று அண்மையில் தோன்றியுள்ளது. சர்வதேசமெங்கும் தமிழ் மக்கள் பேரணிகள், வேண்டுகைகள், சர்வதேச கணனிவலைப் பின்னல்கள், மின்னியல், அச்சுஊடகங்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள் மூலம் எழுப்புவது ஒரேயொரு வினா மட்டுமே. கொசோவோவிற்கு ஒரு நீதி? எமக்கொரு நீதியா?



சிங்களவரால் விரட்டியடிக்கப்பட்ட தமிழீழ மக்கள்

அங்கு இனப்படுகொலை புரியும் சேர்பியர் மீது குண்டுமழை. இங்கோ தமிழர் மீது குண்டுமழை பொழிந்து இனப்படுகொலை புரியும் சிங்களவர்க்கு உதவி எத்தகைய கபடத்தனம். இரட்டை வேடம்? கேள்வி இது, இது தெரிந்த உண்மைதான். புரிந்த விடயம்தான். ஆனால் இது வலியுறுத்தப்படும் காலம் மிகப் பொருத்தமானது. ஏனெனில் போராடிக் களைத்து இளைத்துவிட்ட பாலஸ்தீனம் பேச்சுவார்த்தைக் கடலில் மூழ்கியெழுந்தும் பயனற்ற நிலையில் வேறு வழியின்றி சுதந்திர நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு உலக ஆதரவு மெல்லச் சேரும் நேரம்– வெகுவிரைவில் கிழக்குத் திமோரின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை அம்மக்கள் கையிலே உலகம் ஒப்படைக்கப் போகும் காலம்.

எனவேதான் கொசோவோ விடுதலைப் போராட்டம் அதனை மேற்குலகம் கையாளும் முறை அதற்கு வைக்கப்படப்போகும் தீர்வு என்பன என்றுமில்லாத அளவு உலகின் கவனத்தைப்பெறுகின்றன. உலகம் பிறந்ததே அமெரிக்காவிற்கு பயன்படத்தான் என இராசதந்திர நியாயம் கற்பித்த அமெரிக்க முன்னாள் இராசதந்திரி கென்றி கீசிங்கர் தானுமொரு கேள்வியை இப்பொழுது எழுப்புகின்றார்.

இதுவென்ன அமெரிக்க நீதி? அங்கொரு நீதி? இங்கொரு நீதி? கொசோவோ அல்பேனிய இனமக்கள் படும் அளவற்ற துயரம்தான் அங்கு தலையிடுவதற்கான பிரதான காரணமென்றால் கொசோவோவை விடவும் மிகவும் அதிகமாகவும் பல காலம் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவித்து வரும் ஏனைய நாடுகளில் [சிறீலங்கா உட்பட] ஏன் தலையிடவில்லை என்கிற பகிரங்கமான கேள்வி எழுகின்றதே என்று இக்கட்டான கேள்வியொன்றை அமெரிக்க நிருவாகத்திடம் எழுப்புகின்றார் கீசிங்கர்.

இவ்வாறாக சர்வதேச அரசியல் அரங்கிலே விடுதலைப்போராட்டக் குரல்கள் முதன்மை பெறும்வேளை விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த அண்மைக்கால போராட்டங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் இப்போது மெல்ல மெல்ல தெளிவாகின்றன. பயங்கரவாதப் பட்டம்சூட்டி, தீண்டத்தகாத இயக்கமாக்கி முற்றிலுமான செய்தித்தடையை முழு உலகளவிலும் விதித்து தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பாக உலகம் காத்த மௌனம் மெல்ல மெல்ல கலைகின்றது. இதுவொரு புதிய பரிமாணத்தைக் காட்டுகின்றது. மார்ச் 08ம் திகதிய அமெரிக்க ரைம்ஸ் ஏட்டில் இராசதந்திரம் விடுதலைப்போராளிகள் எனும் தலைப்பிலான பிரதான கட்டுரையொன்றில் புலிகள் உரிய கவனத்தைப் பெற்றிருந்தார்கள். ஏப்ரல் மாத 15 திகதிய நியூஸ்வீக் இதழில் சிறீலங்கா தொடர்பான வெளியான விரிவான செய்திக் கட்டுரையின் மையமாக புலிகளேயிருந்தனர். சிறீலங்காவின் இன்றைய இழிவான சமூக, பண்பாட்டு நிலை வீழ்ச்சியடையும் பொருண்மியம், முதலிடத் தயங்கும் அந்நிய முதலீட்டாளர் போன்ற பல செய்திகளை உள்ளடக்கிய இதன் தலைப்பு 'போரின் நரகத்தில் தொலைந்த நாடு' என்றிருக்கின்றது. இதேவேளை Himal எனும் தென்னாசிய அரசியல் செய்தி இதழில் ஏப்ரல் வெளியீடு சிறீலங்காவின் போர் தொடர்பான சிறப்பு இதழாக வெளிவந்துள்ளது. இறப்பின் தொகையில், அழிவில், இடப்பெயர்வின், தாங்கமுடியாத துயரத்தின் அளவில் இந்த நூற்றாண்டின் மிகமோசமான இனப்பிணக்குள்ள நாடு சிறீலங்கா எனக்கூறும் இவ்விதழ் கொடுத்துள்ள தலைப்பு 'முடிவற்ற போர்'.

நாலுவருட முடிவில் நட்டாற்றில் நிற்கும் சந்திரிகாவிற்கு இவையெல்லாம் இனிப்பான செய்திகளாக இருக்கமுடியாது எனவே நீண்டகாலம் கொசோவோ விடயத்தில் அமைதி காத்த அம்மையார், கதிர்காமரின் வெளிவிவகார அமைச்சுக்கூடாக அறிக்கையொன்றை வெளியிட்டார். ஐ.நாவின் சாசனங்களுக்கு அமைவாக ஐ.நாவின் முன்னிலையில் கொசோவோ விடயத்தில் செயற்படுவதே நல்லது.

நாடுகளின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு, என்பன கணக்கிலெடுக்கப்பட வேண்டும் என அமெரிக்காவிற்கு மெல்லிய குட்டு வைக்கும் இவ்வறிக்கையில் புலிகளையும் கதிர்காமர் இழுக்கின்றார். கொசோவோவில் நடப்பதுபோல் கொசோவோ செயற்பாடுகள் புலிகளும் இங்கே மேற்கொள்வதால், தாங்கள் கொசோவோ அட்டூழியங்களை வன்மையாக கண்டிப்பதாகப் பொருள்படும் வகையில் அறிக்கை வெளியிட்டுள்ளது. **கொசோவோவிற்கும் புலிகளுக்கும் என்ன சம்பந்தம்?** சேர்பியரோடு புலிகளை சம்பந்தப்படுத்தி மறைமுகமாக கதிர்காமர் அறிக்கை விடுவதன் நோக்கம் என்ன? கொசோவோவில் மேற்குலகத்தலையீடு, அது தொடர்பான தாக்கங்கள் **இன்னொரு சேர்பியராக** செயற்படும் சிங்களவருக்கு கொடுத்த அச்சத்தின் விளைவுதான் இச்சொதப்பல் அறிக்கை. பேரினவாதப் பேயாட்டம் போடும் சேர்பியருக்கும் சிங்களவருக்கும் எந்தவித வேறுபாடுமில்லை. கொசோவோ சிக்கலின் பின்னணியே பழைய வரலாற்று கற்பிதங்களிலிருந்து சேர்பியர் மீளாதிருப்பதே மகாவம்சமாயையில் தம்மைத் தொலைத்த சிங்களவர் நிலையும் இதை ஒத்ததே.

ஏனெனில் 1918ஆம் ஆண்டளவில் முதலாம் உலகப் போரின் பின் உருவான யூகோசிலோவியா இன்று எம் கண்முன்னே சிதறி மறையும் விந்தையை நிகழ்த்தும் சக்தி எதுவென்பதை அறிய சேர்பியருக்கும் சிங்களவருக்கும் இயலவில்லை. ஆஸ்திரிய கங்கேரிய இராய்ச்சியத்தின் பகுதியாகவிருந்த சிலோவேனியா, குரோசியா, பொஸ்னியா, கசகோவினா போன்றவற்றை அப்போது சேர்பியா, மொன்றிநீகிரோ இராய்ச்சியங்களின் மன்னராகவிருந்த சேர்பிய மன்னரான அலெக்சாந்தர் கரயோவிடிச் இணைத்து ஒரு நாடாக்கினார். சர்வாதிகாரியான இவர் செய்த பிரதான வேலை புதிய நாட்டில் இராணுவம், காவல்துறை, நீதித்துறை போன்றவற்றில் சேர்பிய இனத்தாரின் மேலாதிக்கத்தை ஏற்படுத்தியதே. தனது கொடுமையான போக்கிற்குப் பரிசாக அவர் 1935ஆம் ஆண்டு கொலை செய்யப்படுகின்றார். இதையடுத்து இரண்டாம் உலகப்போரின்போது கிட்லரின் தலைமையிலான அச்சுநாடுகள் [Axis Powers] படை யூகோசிலோவியாவை ஆக்கிரமிக்கின்றன. இதற்கு எதிராக யோசப் ரிட்டோ தேசபக்த இயக்கமொன்றை கட்டியெழுப்பி போரிடுகின்றார். சோவியத்படை ஈற்றில் கிட்லரின் படைகளை வெளியேற்றியது. அதற்கு ரிட்டோ உதவியதற்குப் பதிலாக சோவியத் யூகோசிலோவியாவை ரிட்டோவிடம் ஒப்படைத்துச் செல்கின்றது. மார்சல் ரிட்டோ வித்தியாசமான தலைவர் 1946ல் பல இன யூகோசிலோவியாவை மக்கள் குடியரசாக பிரகடனம் செய்து பல்வேறு இனத்தாருக்கு சுயாட்சி தன்மையான அதிகாரங்களை பிரித்துக் கொடுத்து சமதரும பாங்கில் ஆள முயல்கின்றார். எனினும் சேர்பிய மேலாதிக்கம் நீடித்தது. யூகோசிலோவியாவின் ஏனைய பகுதிகளில் தேசிய உணர்வு தலை தூக்கியது. ஈற்றில் ரிட்டோவின் வீழ்ச்சிக்கும் இதுவே வழிகோலியது. குரோசியா, சிலோவேனியா போன்றவை சேர்பிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தனிநாடாக முயன்றன. கொசோவோ வாழ் இஸ்லாமியர் தம்மை அல்பேனியாவோடு இனங்காட்டி இஸ்லாமிய தேசியவாத உணர்வினை தம்மில் வளர்க்கலாயினர். இக்கட்டத்திலே 1980ல் ரிட்டோ இறக்கின்றார். இதைத்தொடர்ந்து தேசிய இன உணர்விலான எழுச்சிகள், அமைதியின்மை அங்கு தோற்றுவிக்கின்றன. இக்கட்டத்திலே சேர்பியரின் பெருந்தேசியவாதக் கனவை நனவாக்கப் போவதாகக் கூறி சிலோபடான் மிலோசவிச் 1989ல் பதவியேற்கின்றார். கொடிய இராணுவ அடக்குமுறையைக் கையாண்டு இனச்சுத்திகரிப்பை மேற்கொண்டு அகன்ற சேர்பியாவை உருவாக்க அவர் எடுத்த முயற்சி 1990களில் படு தோல்வியைச் சந்திக்கின்றது. யூகோசிலோவியா சிதறியது, சிலோவேனியா, குரோசியா, மசிடோனியா, பொஸ்னியா, என்பன விடுதலை உணர்வின் எழுச்சிக்கு சான்றாகின. இப்பொழுது மிலோசவிச்சிடம் மிஞ்சியிருப்பது கொசோவோ மட்டுமே.

1992 ஏப்ரலில் எஞ்சியிருந்த சேர்பியாவையும் மொன்றிநிகிரோவையும் இணைத்து இன்றைய யூகோசிலோவியா குடியரசாக பிரகடனம் செய்த மிலோசவிச் கொசோவோ மீது பாய்கின்றார். அதனுடைய தனித்த அதிகாரங்களை பறித்தெடுத்தார். கொசோவோவின் மிகச் சிறிய அளவில் வாழ்ந்த [கொசோவோவின் குடித்தொகையான 02 மில்லியனில் 1.8 மில்லியன் கொசோவோ அல்பேனிய இன மக்களே, மிகுதியே சேர்பியர்] சேர்பியரைத் தூண்டி இனப்படுகொலையை தொடர்ந்தனர். இத்தகைய கொடுமைகளுக்கு வரலாற்றினை வேறு அவர் துணைக்கு அழைக்கின்றார். 600 ஆண்டுகளுக்கு முன் கி.பி 1389வில் கொசோவோ சமரில் துருக்கிய இஸ்லாமியர் வைதீக கிறிஸ்தவரான தம்மைத் தோற்கடித்தமைக்கு பழிவாங்க அலையும் சேர்பியர், துருக்கிய ஓட்டோமன் சாம்ராய்ச்சியத்தின் ஆட்சியின் விளைவாக தோன்றிய கொசோவோ அல்பேனியரை தமது விபரீத மனநிலைக்கு பலியாக்குகின்றனர். புனிதபூமி ஜெருசலேம், கொசோவோவை கைவிடோம் எனக்கூறி பேரினவாத தீயை வளர்க்கும் இவர்கள் போக்கினை சிங்களவரின் பௌத்த பேரினவவாத வெறியோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

சேர்பியரின் அட்டூழியங்களுக்கு எதிர் வினையாக 1996ல் KLA எனப்படும் கொசோவோ விடுதலைப் படை உருவாகி



சேர்பியயரால் விரட்டியடிக்கப்பட்ட கொசோவோ மக்கள்

சேர்பியர் மேல் தாக்குதல்களைத் தொடங்கியது. கொசோவோ மக்கள் தமது தாயகத்திற்காக போராடலாயினர். 1997, 1998 களில் சேர்பியரின் படுகொலைகள் எல்லை மீறின. தனக்குப் புறத்தே நடக்கும் கொடுமைகள் தனக்கு அவமானத்தை தருவதைத் தடுக்க போல்கன் பகுதியில் தனது மூக்கை நீட்டி மேலாண்மையை நிலைநாட்ட அமெரிக்கா நேரடியாக நேட்டோ துணையோடு தலையிட்டது.

1998 அக்டோபரில் கறாறாகப் பேசும் கோல்புறுக்கை தூதராக அனுப்பி மிலோசவிச்சோடு உடன்பாடொன்றை அமெரிக்கா செய்தபோதும் அதனால் ஏற்பட்ட அமைதி சில மாதங்களே நீடித்தது, இறுதியாக, அண்மையில் பிரான்சில் றம்புயேயில் நடைபெற்ற பேச்சுக்களையும் மிலோசவிச் கணக்கிலெடுக்கவில்லை. சினங்கொண்ட அமெரிக்கா– நேட்டோ தரப்பு ஐ.நாவைக் கூட கலந்தாலோசிக்காமல் சேர்பியரை தண்டிக்கத் தொடங்கிவிட்டது. பொருண்மியத் தடை தரைப்படை அனுப்பல் என கதை இப்போது நீளுகின்றது

[தொடர்ச்சி 15ம் பக்கம்]

# வன்னிக்களத்தில் புலிகளும் தேர்தல்களத்தில் 'ரணகோஷ'வும்

"ரணகோஷ" 1, 2 இராணுவ நடவடிக்கை மூலம் அதைப் புலிகள் மீதான வெற்றியாகக் காட்டி நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் தனது செல்வாக்கை முற்றாகச் சரிந்து விடாது தக்கவைக்க முடிந்திருக்கின்றது சந்திரிகா அரசால். இதன் மூலம் இராணுவம் பலமாக இருப்பதாகவும் புலிகள் வெல்லப்பட்டுவிடுவர் என்றும் சிங்கள பாமர மக்களை ஏமாற்ற அரசால் முடிந்திருக்கக்கூடும். ஆனால் இதன் உண்மை நிலை என்ன?

பெருமெடுப்பில் தனது பலத்தின் முழுமையையும் பயன்படுத்தி செயற்பட்ட "ஜயசிக்குறுயை" பேரழிவுக்கு உட்படுத்தி தோல்வியடையச் செய்த புலிகளுக்கு "ரணகோஷ" தம் வலுக்கெட்டாத நடவடிக்கையா?

ஒரு இராணுவ நடவடிக்கை தன் தேசத்தின் நலனுக்கான இராணுவ நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாது பிறகாரணங்களுக்காக இராணுவ நடவடிக்கை அமையுமானால் அது தன் இராணுவத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கி எதிரி தரப்பிற்கு வெற்றிக்கான வாய்ப்பை அளித்துவிடும்.

"ரணகோஷ" 1, 2 பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாகாணசபைத் தேர்தல் வெற்றிக்கான நோக்கம் கொண்ட இராணுவ நடவடிக்கை என்பது வெளிப்படையாகப் புரிந்துகொள்ளக் கூடியதொன்றே. ஏனெனில் சந்திரிகா அரசு தன் கட்சி அரசியல் தேவைக்காக இராணுவ நடவடிக்கை செய்வது இதுதான் முதற்தடவையும் அல்ல.

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காக "எடிபல" மேல்மாகாணசபைத் தேர்தலுக்காக "ரிவிபல" இப்போது ஏனைய ஐந்து மாகாணசபைத் தேர்தலுக்காக "ரணகோஷ" என அதன் பட்டியல் நீண்டு வருகின்றது. இந்த அரசு சந்தித்த மூன்று தேர்தல்களுக்கும் இராணுவ நடிவடிக்கைகள் செய்தே வாக்குத் திரட்ட முயன்றிருக்கிறது. இந் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் வாக்கு வேட்டைகளை குறியிலக்காகக் கொண்டு நடத்தப்பட்டவை. அவ்வளவுதான்.

இவ்வாறான எந்த நடவடிக்கைக்கும் புலிகள் இயக்கம் எதிர்த்தாக்குதல் செய்து தம் பலத்தை சிதைத்துக் கொண்டதில்லை. புலிகள் அமைப்பு தமிழீழ விடுதலைக்காக தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் அணிதிரண்டு நிற்கும் தமிழர்களின் ஒரு இராணுவ அரசியல் சக்தி, அதன் குறியிலக்கு தமிழீழ தேசவிடுதலையே. இக் குறியிலக்கின் பிரதான தடையாக இருக்கும் எதிரியின் இராணுவ பலத்தை உடைத்து வெற்றி கொள்வதற்கான போர் மூலோபாயத்தையும் அதற்கான தந்திரோபாயத்தையும் செயல் நுணுக்கங்களையும் வகுத்து போரை வழிநடத்தி வருபவர் எமது தேசியத்தலைவர் வே. பிரபாகரன்.

இன்று புலிகளின் போர் அசைவுகளை உலகம் அவதானித்து வருகின்றது. புலிகள் வெற்றிகொள்ளப்பட முடியாத இராணுவ பலம் பொருந்திய ஒரு சக்தி என்பது இராணுவ அறிவுலகிற்கு வெளிப்படையான ஒரு விடயம். அப்படியாயின் "ரணகோஷ" புலிகளின் வல்லமைக்கு அப்பாற்பட்டதா? நடந்தது என்ன?

போர் மையங்கொண்டு நிற்பது வன்னிச்சமர்க்களத்தில். வன்னிச்சமர்க்களத்தில் எதிரியின் இராணுவ நோக்கம் பாதை திறப்பு. பாதை திறப்பு இன்று பாதி வழியில் நிற்பதற்குக் காரணம்! அது தன் பலத்தில் அடைந்த பேரிழப்பு. பேரிழப்பிற்கான காரணம் தலைவர் பிரபாகரனின் போரறிவு, புலிகளின் போர்ப்பலம், புலிகளின் போராற்றல்.

பாதை திறப்புச் சமர் நடவடிக்கை என்பது, அரசுக்கு ஏற்பட்ட ஓர் நிர்ப்பந்தம். யாழ்ப்பாண ஆக்கிரமிப்பை புலிகள் மீதான வெற்றியாகவும். தமிழர் மீதான வெற்றியாகவும் சிங்கள தேசத்திற்குக் காட்டி, இனவாத அரசியல் நடத்தி தம்மை அரசியலில் நிலைபடுத்திக்கொண்டது சந்திரிகா அரசாங்கம்.



'இலக்கு வெகு துல்லியம்!' – எறிகணை உசுப்பும் ஏவுபொறிச் சுடுதிறன் மேலாண்மை தமிழர்சேனையின் மரபுப்போர் முதிர்ச்சியில் ஒரு மைல்க்கல்

அந்த மாயையை புலிகள் "ஓயாத அலைகள்" 1 மூலம் வேரோடு பிடுங்கி எறிந்தனர். மேலும் முல்லைக்கடற் பரப்பை புலிகள் மீட்டமை யாழ்ப்பாண வெற்றியை கேள்விக்குறியாக்கியது. யாழ்ப்பாணத்தை தக்கவைக்க பாதை திறப்பு நடவடிக்கை தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக அரசுக்கு எழுந்தது. பாதை திறப்பிற்கான சமரைத் தொடங்கியது.

அசாத்தியமான ஒரு இராணுவ இலக்கிற்காக இராணுவத்தை போர் செய்ய நிர்ப்பந்தித்து இராணுவ இயந்திரத்தை வன்னிச் சமர்க்களத்தில் மையம் கொள்ளவைத்து, இராணுவப் போர்ப்பலத்தை வன்னிச் சமர்க்களத்திற்கு இழுத்து, தமது பலத்திற்கேற்ப, சிதறடிக்கப்பட்ட இராணுவத்தை பகுதி பகுதியாகத் தாக்கியழித்து வெற்றி கொண்டு வருகின்றது புலிப்படை.

இச்சண்டைகளிலும், சமர்களிலும் குறைந்த பலத்தைப் பிரயோகித்து குறைந்த இழப்புக்களுடன் நிறைந்த வெற்றியைக் காண்பதுவே முக்கிய விடயமாகக் கொள்ளப்படுகின்றது. இத் தாக்கியழிப்புச் சமர்களின் வளர்ச்சிப் போக்கில் இராணுவ இயந்திரம் மீது இறுதித் தாக்கியழிப்பிற்காக புலிகள் எழுந்து கொண்டிருப்பதுமே இன்றைய நிலைமை.

இவ்வாறான சூழ்நிலையில்தான் அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை பிற்போட முடியாது சந்திக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. இத்தேர்தலைச் சந்திக்க இராணுவ வெற்றியொன்றின் தேவை இனவாத அரசியலில் அத்தியாவசியமானது. இராணுவ நோக்கம் கருதிய பாதைதிறப்புச் சமரில் ஏற்பட்ட தோல்வியைத் திசைதிருப்பும் கட்சி அரசியல் நோக்கத்திற்காக "ரணகோஷ" ஆரம்பிக்கப்பட்டது.

புலிகள் தமது தந்திரோபாய நோக்கத்திற்கேற்ப "ரணகோஷ"1 இல் முன்னேறும் இராணுவத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான எல்லையை வரையறை செய்தனர். இராணுவம் அத்தோடு தமது முன்னேற்றத்தையும் நிறுத்திக் கொண்டது.

அதன்படி தள்ளாடி முகாமைத் தளமாகக் கொண்ட, "ரணகோஷ"2 ஆரம்

- கு.கவியழகன் -

பிப்பதற்கான ஏற்பாடுகள் இராணுவத் தரப்பால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. மாந்தையிலிருந்து பள்ளமடு ஊடாக பெரியமடுவிற்கும், இரணையிலுப்பைக் குளத்திலிருந்து பாலமடு ஊடாக பெரியமடுவிற்கு வந்தடைவது தான் இராணுவத் திட்டமாக இருந்தது. ஏற்பாடுகள் பூர்த்தியாகும் இறுதித் தறுவாயில் தள்ளாடி முகாமின் மீது விடுதலைப் புலிகளின் பீரங்கிப்படைப்பிரிவு மூலம் ஒரு "சிக்கனத்தாக்குதலை" ஏற்பாட்டைக் குலைக்கும் நோக்குடன் புலிகள் நடத்தினர். ஆட்பலம் இழக்கப் படாது எதிரியின் ஏற்பாட்டைக் குலைக்கவேண்டும் என்பது இங்கு கருத்திற் கொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகளின் பீரங்கிப்படைப்பிரிவு மட்டும் இத் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டது.


இத்தாக்குதலால் எதிரியின் போர் நடவடிக்கை ஆயத்தங்கள் உடனடியாகக் குழம்பின. களஞ்சியங்கள் அழிக்கப்பட்டன. 20 இராணுவம்வரை உயிரிழந்ததாகவும் நூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் இராணுவத் தரப்பு ஒத்துக் கொண்டுள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. மேலதிக உயிரிழப்பு அறியப்படவில்லை. சிறீலங்கா இராணுவத்தால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட இரும்புக்குதிரையென அழைக்கப்படும் இராணுவ வாகனத்தில் 09 வாகனம் இத்தாக்குதலால் எரிந்ததென "சண்டே ரைம்ஸ்" பத்திரிகை தெரிவித்தது. இரும்புக்குதிரை எனப்படும் இவ்வாகனம் தன்னோடு ஒரு ஆட்லறியைக் கட்டியிழுத்துச் செல்வதுடன் 150-200 வரையான ஆட்லறி செல்களையும் காவிச் செல்லக்கூடியது.

1500க்கு குறையாத ஆட்லறிசெல்கள் வெடித்துச் சிதறியதாக கொழும்பு இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. தளம் மீது மிகத் துல்லியமான எறிகணை வீச்சினை புலிகளால் எவ்வாறு செய்ய முடிந்தது என இராணுவத் தரப்பு குழம்பியது. இது இராணுவத்திற்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் என்பதில் சந்தேகம் இல்லை.

இத்தாக்குதலின் பின் தள்ளாடியிலிருந்து 21-2 பிரிகேட் தலைமையகம் வங்காலைக்கு மாற்றப்பட்டுள்ளது. புலிகள் கையாண்ட ஆள் இழப்பற்ற "சிக்கனத்தாக்குதல்" முறையால் இனி வரும் காலத்தில் முன்னணிக் காவலரண்கள் அருகே சண்டைக்கான ஏற்பாட்டுத் தளங்களை வைத்திருக்கவோ, ஏற்பாட்டைச் செய்யவோ முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இது போல கட்டளைத் தலைமையகங்கள் ஆயுத, வெடிபொருட்களஞ்சியங்கள், ஆட்லறிகள் என்பவற்றை வைத்திருப்பதில் நெருக்கடி உருவாகப் போவதை எண்ணி இராணுவத்தரப்பு குழம்பியுள்ளது. இது கள நடவடிக்கையில் இராணுவத்திற்கு மேலும் கடினத்தைக் கொடுக்கப்போகின்றது.

இரண்டு வருடத்தில் புலிகளின் பீரங்கிப்படையின் உருவாக்கமும், வளர்ச்சியும் வன்னிச்சமர்க்களத்தில் எதிரிக்குப் பெரும் சவாலாக அமைந்தது. புலிகளின் பீரங்கிக்கையாளுகையினால் - எதிரித்தரப்பு அச்சமடைந்துள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள இராணுவத்தளத்தின் மீது தாக்குதல் நடாத்தியது மட்டுமல்லாது அதன் முக்கிய பகுதிகள் அவற்றின் முக்கியத்துவம் கருதித் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறான துல்லியமான தாக்குதல் புலிகளால் எப்படிச் சாத்தியம்? என்பதே எதிரி விடைகாணத் துடிக்கும் கேள்வியாகிவிட்டிருக்கிறது.

(15 ஆம் பக்கம் பார்க்க)



# போராளியின் குருதிச்சுவடுகள்

## கரும்புலி லெப்.கேணல்
## சுபேசன் / கிள்ளிவளவன்

மருசலீன் அல்வின்

மன்னார்.

பிறப்பு: 02.07.1971

இயக்கத்தில்: 10.02.1990

சகோதரர்கள்: ஒரு அண்ணனும் மூன்று அக்காவும் நான்கு தம்பியும் ஒரு தங்கையும்.

கரும்புலியாய் இணைந்து கொள்ள முன் பங்குபற்றிய தாக்குதல்கள்:

- ★ ஆ.க.வெ. பெருஞ்சமர்.
- ★ மின்னல் இராணுவ நடவடிக்கைக்கு எதிரான சண்டை, கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப் பட்ட பதுங்கித் தாக்குதல்
- ★ சின்னமண்டலாய்ப் பகுதியில் மேற்கொண்ட காவலரண் அழிப்புச் சண்டை
- ★ கட்டுப்பத்தை இராணுவ முகாம் தாக்குதல்.

# விழுதெறிந்த விருட்சத்தின் வெளித்தெரியா வேர்கள்

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த இரவின் அமைதி குலைந்து நீண்ட நேரமாகிவிட்டது. கருமை பூசியிருந்த இருளினை இடையிடைமுழங்கிய துப்பாக்கி, குண்டுகளின் வெளிச்சம் சீர்குலைந்து கொண்டிருந்தது.

எதிரியின் பலமான தடைகளை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த எமது கரும்புலி அணிகள் தாக்குதல்களை வேகப்படுத்தின. நாங்கள் தேடிச்சென்ற இலக்குகள் குறித்த நேரத்திற்குள் தகர்த்தெறியப்பட்டன. இலக்குகளை அழித்ததும் கரும்புலி மேஜர் குமுதனிடமிருந்து பின்வாங்கும்படி கட்டளை கிடைத்தது.

நாங்கள் பின்வாங்குவதற்கான வியூகங்களை ஏற்படுத்தி வேமாகப் பின்வாங்கத் தயாரானோம். ஆனால் எங்கள் அணியினைப் பொறுப்பேற்று வந்திருந்த சுபேசனிற்கு காலிலும், நெஞ்சிலும் குண்டு பாய்ந்திருந்தது. எங்களுடன் சேர்ந்து சுபேசனால் பின்வாங்க முடியவில்லை. தூக்கிக் கொண்டு வந்தாவது அவனைக் காப்பாற்றுவோம் என முயற்சித்தோம். அந்த நிலையில் அது சாத்தியப்படாத காரியம்.

"என்னைப் பார்த்து நிற்காதேங்கோ. என்னைத் தூக்கிக் கொண்டு பின்வாங்க ஏலாது. நீங்கள் போங்கோ" சுபேசன் எங்கள் எல்லோரையும் பார்த்து எதுவித கலக்கமும் இல்லாது உறுதியாக இறுதிவிடைதந்தான்.

எப்படிஅவனைப் பிரிந்து போவது எங்களுக்கு அது கஷ்டமாக இருந்தது.

"நீங்கள் நிறையச் சாதிக்க வேண்டியனீங்கள். என்னைப் பார்த்து நின்று வீணாய்க் காயப்படாதீங்கோ தயவுசெய்து போங்கோ நான் சர்ச்சரை இழுக்கப்போகின்றேன்"

இப்பொழுது நாங்கள் அவனைப் பிரிந்து போனால் இன்னும் ஒரு சில விநாடிகளிற்குள் அங்கே சம்பவிக்கப் போகும் அந்த நிகழ்வை நினைத்துப் பார்க்கவே உயிரைப் பிழிந்தது. இனி என்றுமே, எப்பவுமே, அவனைப் பார்க்கவோ அவனோடு பேசவோ முடியாது.

அப்படி ஒரு நிகழ்வு இங்கே நடக்குமானால்... எண்ணிக் கொள்ளவே நெஞ்சு கனத்தது.

"சுபேசன் வீரச்சாவடைந்துவிட்டான்" என்று எப்படி அவன் தங்கையிடம் போய்ச் சொல்லுவது. அதை அவள் எப்படித் தாங்கிக் கொள்ளப்போகின்றாள். சுபேசன் தங்கைமீது எவ்வளவு பாசம் வைத்திருந்தான் என்னமாதிரியெல்லாம் நேசித்தான். சின்ன வயதிலிருந்து ஒருவர்மேல் ஒருவர் அளவில்லாத பாசம் வைத்து வளர்ந்தவர்கள். தாய்தந்தையிலோ, மற்ற சகோதரர்களிலோ வைத்த பாசத்தைவிட சுபேசன் மீது அதிக பாசம் வைத்திருந்தாள் அவள்.

நாங்கள் சீனன் குடாத்தாக்குதலுக்காக பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த வேளை....

சுபேசனின் தங்கையை யாரோ ஒருவன் கடத்திச் செல்கிறான். சுபேசன் துடித்துப்போய் ஓடிச் சென்று தங்கையைக் காப்பாற்றுகின்றான். இருந்தாலும் தலையில் பலமாக அடிபட்டு மயங்கிவிடுகின்றாள். மயங்கிய தங்கையைக் கைகளில் சுமந்து, பின் ஓரிடத்தில் தண்ணீர் தெளிக்கவே அவள் மயக்கம் தெளிந்தாள்.

இப்படி ஒரு கனவினைக்கண்டுவிட்டு அவன் நிஜமாகவே துடித்துப் போய்விட்டான். நித்திரையில் திடுக்கிட்டு விழித்தவனுக்கு மறுபடியும் தூக்கம் வரவில்லை. தங்கையின் நினைவுகளே சுற்றிச் சுற்றி அவன் கண்களுக்குள் நுழைந்தன.

விடிந்ததும் தங்கையிடம் சென்று அவளைப்பார்த்து தான் கண்ட கனவினை அவளோடு கதைத்தபின்னர்தான் அவனின் மனம் ஆறுதலானது. இரவு கனவு கண்டுவிட்டு எழுந்து போராளிகளிடம் கூறும்போது எவ்வளவு துடித்தான். கனவிலேயே தங்கை படும் கஸ்ரத்தினைக் கண்டுவிட்டு தங்கைக்கு என்னவோ எதுவோ என ஏங்கிய அவனது உணர்வுகள் தங்கையை இறுதியாய்ப் பிரிகின்ற வேளை எப்படியிருந்திருக்கும். அவனின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்!

ஆனையிறவுப் படைத்தளமே எமது இலக்கிற்கான இடம். எமது முகாமிலிருந்து நாங்கள் புறப்பட்ட அந்த இறுதி நேரம்

நாங்கள் எல்லோரும் வாகனத்தில் ஏறி அமர்ந்துவிட்டோம். இன்னும் சில வினாடிகளில் வாகனம் புறப்பட்டுவிடும். இறுதியாய்ப்பிரிகின்ற அந்தக்கணம் எல்லோரும் மாறிமாறி விடை கொடுத்துக் கொள்கின்றோம். அந்த இறுதியான விடைகொடுப்பு யார்யாருக்கு நிரந்தரமாய் போகும் சந்தர்ப்பம் கிடைக்குமோ தெரியாது. என்றுமே எப்பவுமே இனிக்காணமுடியாத அந்தப் பிரிவு நிகழ்ந்த வேளையில் சுபேசனை விட்டுப் பிரிந்திருக்கமுடியாது இயக்கத்திற்கு வந்த அவனின் பாசத் தங்கையும் அங்கே நிற்கின்றாள். இன்னும் ஒன்றோ இரண்டோ வினாடிகளில் அவன் புறப்படப் போகின்றான். அந்த ஒரு சில வினாடிகளைக்கூட தங்கையுடனேயே பேசிக்கழித்தான்.

இரண்டு பெரு நதிகள் ஓடிவந்து கலக்குமே ஒரு இடம்.... அங்கு எழுகின்ற ஆர்ப்பரிப்பினைப் போன்று இரண்டு பேர் மனதிற்குள்ளும் எத்தனையோ மனக்குமுறல்கள் என்னால் சொல்ல முடியவில்லை.

போராளிகளுடன் சிறிது காலம் பழகிப்பிரியும் போது கூட தாங்கிக் கொள்ளமுடியாத சுபேசன், நினைவு வந்த நாளில் இருந்து உயிராய் நேசித்த தங்கையின் பிரிவை எப்படித்தான் தாங்கிக் கொள்ளப்போகின்றான்.

தங்கைக்குத் தெரியும் அண்ணன் கரும்புலி என்று, இப்பவும் கரும்புலித் தாக்குதல் ஒன்றிற்குத்தான் போகின்றான்......

சீனன் குடாவில் இலக்குகளை அழித்துவிட்டு வந்த மாதிரி இச்சண்டையிலும் இலக்கை அழித்தவிட்டு அண்ணன் திரும்பி வரமாட்டானா! அவளது மனம் பிரார்த்தித்தது.

உயிரோடு ஒட்டிய உறவல்லோ சுபேசனிற்கும் வேதனையாகத்தான் இருந்தது. தங்கையின் கண்ணீரைத் துடைத்து "அழக்கூடாது, தலைவர் இருக்கிறார் கவலைப்படக்கூடாது." தங்கையிற்கு அறிவுரை சொல்லி ஆறுதல் வார்த்தைகள் கூறி எவ்வளவோ மனப் போராட்டத்தின் மத்தியில் பிரிக்க முடியாது பின்னிப் போன உறவைப் பிரித்துக் கொண்டு வாகனத்தில் ஏறி அமர்ந்து கொள்கின்றான்.

அவள் அண்ணனுக்கு கையசைத்தாள். அவனும் கையசைத்தான். வினாடிகளைக் காலம் மிக வேகமாக விழுங்கிக்கொண்டது. தங்கையின் விசும்பல் காதில் கேட்கின்றது. தங்கையின் சிறு கலக்கத்தைக் கண்டு தாங்கிக்கொள்ள முடியாத சுபேசனிற்கு எப்படியிருந்ததோ.

வாகனம் மெல்லமெல்ல நகரத் தொடங்குகின்றது. மீண்டும் ஒரு தடவை தங்கையைப் பார்த்துவிட வேண்டுமென ரோச்சடித்து தங்கையைப் பார்க்கின்றான். தங்கையின் முகம் தெரிகின்றது. அவளின் வாட்டத்தைக் கண்டதும் அவளிற்கு ஆறுதல் சொல்ல வேண்டும்போல் துடித்தது அவன் மனம். வாகனம் மெல்லமெல்ல வேகம் கூடியது. பிரிவைத் தாங்கமுடியாது சுபேசன் தலைகவிழ்ந்து கொள்கின்றான்.

இந்த இறுதி நேரம் அவன் உணர்வுகள் எத்தனை தடவை சிலிர்த்திருக்கும். இவ்வளவு பாசமான உறவினைவிட இந்தத் தேசத்தின் மீதும் மக்களின் மீதும் எவ்வளவு உன்னதமான பற்று வைத்திருக்கின்றான். அவனது இலட்சியம் எவ்வளவு புனிதமானது. அவன் தன் தேசத்தில் எல்லோரையும் ஆழமாக நேசித்தான். அதனால்தான் அவர்களின் துயரத்தைக் கண்டு தாங்கிக் கொள்ள முடியாமல் கரும்புலியாகினான். அடுத்தவர் துயரத்திற்கு தோள் கொடுக்கவும் மற்றவரின் வேதனைக்காக கண்ணீர் சிந்தவும் பழகிய இதயம் அவனது இதயம். தலைவர் ஒரு போராளியை எப்படியெல்லாம் எதிர் பார்த்தாரோ அத்தனையும் பிரதிபலிப்பதாகத்திகழ்ந்தான்.

1993ம் ஆண்டு தன்னைக் கரும்புலிகள் அணியில் இணைத்துக் கொண்டவன் சுபேசன். இன்றுவரை எத்தனை ஆண்டுகள் மனம் சலிக்காது கொள்கை ஒன்றையே நெஞ்சில் சுமந்து எவ்வளவு கடுமையான பயிற்சிகளையெல்லாம் எடுத்திருப்பான். இறுதி மூச்சிலே பகை எரிக்க அந்த இலக்குக் கிடைக்கும்வரை இத்தனை வருடங்கள் காத்திருந்தானே! அவனது இலட்சியம் எத்தனை பெரியது.

அவனிற்கு உடம்பில் ஏராளமான காயங்கள் 1994ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆனையிறவுப்படைத்தளம் மீதான கரும்புலித்தாக்குதல் ஒன்று செய்வதற்கான இறுதி வேவிற்கு சுபேசன் சென்றிருந்தான். அன்று எதிரியுடன் மோத நேர்ந்தது. சுபேசனுக்கு கையில் பெரிய காயம். அன்று ஏற்பட்ட காயத்தினால் இன்று பெரிய வேலைகள் செய்தால் கைமூட்டுக்கள் கழன்றுவிடும். பின் அவன் தானே கைமூட்டைக் கொழுவி தன் பணிகளைச் செய்துகொள்வான். எல்லா ஆயுதங்களையும் சிறப்புற இயக்கும் தேர்ச்சி பெற்றதோடு சிறந்த சூட்டு வல்லமையும் கொண்டவன். எந்தவொரு இறுக்கமான சூழ்நிலையிலும் நன்கு திட்டமிட்டு அணிகளைச் சிறந்த முறையில் வழிநடத்தக் கூடியவன். சீனன்குடாவில் எதிரி வானூர்திகளையும் கனரக ஆயுதங்களையும் அழித்த கரும்புலி அணிகளிற்கு சுபேசனே தலைமையேற்றுச் சென்றிருந்தான்.

அன்றொரு நாள் ஆகாய கடல் வெளித் தாக்குதலை முறியடிப்பதற்காக வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவுக்கு சிங்கள இராணுவம் பெரிய நகர்வு ஒன்றினை மேற்கொண்டது. அதற்கு ஊடறுப்புத்தாக்குதல் மேற்கொள்ள நின்ற எமது அணிகளுடன் ஒன்றாகச் சுபேசனும் 05 பேர் கொண்ட வேவு அணியுடன் நின்றான். முதல் நாள் சுபேசனும் சென்று வேவு பார்த்துவிட்டு வந்திருந்தான். அடுத்த நாள் ஊடறுப்புத்தாக்குதலுக்குத் திட்டமிட்டு வேலையிருந்தமையால் சுபேசன் வேவுக்குச் செல்லாது முகாமில் தங்கிக் கொள்கின்றான். சண்டைச் சூழ்நிலை காரணமாக உணவு விநியோகம் பெரிதும் சீர்குலைந்திருந்தது. எப்போதாவது வரும் சாப்பாட்டைச் சாப்பிடுவது. சாப்பாடு வராவிட்டால் சாப்பாட்டை எதிர்பார்க்காது தத்தமது கடமைகளைச் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலையே இருந்தது. அன்று சாப்பாடு வந்திருந்தது. ஆனால் அங்கே நின்ற ஆட்களைவிட வந்திருந்த சாப்பாட்டுப் பொட்டலங்கள் குறைவானதாக இருந்

(7 ஆம் பக்கம் பார்க்க)



# போராட்டமே தமிழினத்தின் வாழ்வு

## புலிகளின் குரல்

காலத்தாயின் கருவறைக்குள் உயிர் பெற்று வரும் 21ம் நூற்றாண்டு இன்னும் சில மாதங்களில் பிறக்கப்போகின்றது.

புதிய நூற்றாண்டை அமைதி நூற்றாண்டாக ஆக்கிப்படைக்க உலகசமூகம் விரும்புகின்றது.

தேசிய இனப்பிரச்சனைகள் காரணமாக ஆயுதப் போர்களில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கங்களும் - போராளி இயக்கங்களும் அமைதி வழியில் அரசியல் தீர்வுகளை நாட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, அது அறைகூவல் விடுகின்றது.

இலங்கைத்தீவின் இனச்சிக்கலுக்கு சமாதான வழிமுறையில் நியாயமான - நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் இலக்குடன் சிங்கள அரசாங்கத்துடன் அரசியல் பேச்சுக்களில் ஈடுபட புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது.

கடந்த (1998 நவம்பர்) மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதான முயற்சிபற்றிய ஒரு தெளிவான கருத்தை முன்வைத்திருந்தார். சர்வதேச மத்தியத்துவத்தையும் இதற்காகக் கோரியிருந்தார்.

ஆறு மாதங்கள் கடந்து விட்ட இன்றைய நிலையிலும் தலைவரின் சமாதான அழைப்பிற்கு சாதகமாக சந்திரிகா அரசாங்கம் பதிலளிக்கவில்லை. இதற்குப் பதிலாக போர்க்கூச்சல்களே சிங்கள அரசின் பக்கமிருந்து தொடர்ச்சியாக வந்த வண்ணமுள்ளன.

அண்மையில் வன்னிக்கு வந்து புலிகளின் சமாதான நல்லெண்ணத்தை சுமந்தபடி திரும்பிச்சென்ற சிங்களத்தின் சர்வ மத குருமாரின் குழுவிற்கு, போர் தொடரும் என்ற காட்டமான செய்தியையே, அம்மையார் பதிலாக வழங்கியிருந்தார்.

சொல்வதுடன் அவர் நின்று விடவில்லை. புதிய நூற்றாண்டில் போரை, புத்தூக்கத்துடன் நடாத்துவதற்கான முன்னேற்பாடாக புதிய - புதிய ஆயுத தளவாடங்களை அம்மையாரின் அரசாங்கம் கொள்வனவு செய்து வருகின்றது.

படையினர் கைப்பற்றியுள்ள தமிழர் நிலத்தின் விஸ்தீரணத்தை உதாரணத்திற்காக காட்டவிரும்பும் சந்திரிகா அம்மையார், தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கண்டுவிட முடியும் என்பதிலேயே நம்பிக்கையாக இருக்கின்றார்.

வன்முறையின் கொடூரத்தையும் - போரின் துயரத்தையும் உணர்ச்சி பூர்வமாக எடுத்து விளக்கி - வாக்குத்திரட்டி அதிகாரத்தைக் கைப்பற்றிய அம்மையார், இப்போது படையினர் ஆக்கிரமித்த தமிழர் நிலங்களை அடையாளம் காட்ட நிறம் தீட்டப்பட்ட நிலவரைபடங்களை விநியோகித்து வாக்கு வேட்டை நடாத்தி - ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்த முயல்கின்றார். பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியாத பிரச்சினைகளே இல்லை! என்று சித்தாந்தம் பேசிய அம்மையார். இப்போது தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் சர்வரோக நிவாரணி போர் தான்! என தத்துவம் பேசுகின்றார்.

போர் பிரசவித்துவரும் பெருந்தொகையான உயிரழிவுகளைப் பற்றியோ - பிரமாண்டமான பொருண்மிய நாசத்தைப் பற்றியோ அம்மையார் சிறிதும் கவலைப்படவில்லை. சிறீலங்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலையும் வென்று - போரைத் தொடர அவர் திட சங்கற்பம் பூண்டுள்ளார்.

இதேவேளை தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்க தம்மிடம் நல்லதிட்டம் உள்ளது. என - அடுத்த அரசாங்கத்தை அமைக்க துடிக்கும் ஐ.தே.கட்சி அடிக்கடி அறிவிப்புகள் செய்கின்றது. அது என்னதிட்டம் என இன்றுவரை அது பகிரங்கப்படுத்தவில்லை.

முன்னைய ஐ.தே.கட்சி அரசாங்கம் போரை நடாத்தியபோது படையினர் சந்தித்த உயிரிழப்புக் குறைவு என்றும், இப்போதைய பொ.ஜ.ஜ.முன்னணி அரசாங்கம் நடாத்துகின்ற போரில் பாரிய உயிரழிவுகளை படையினர் எதிர்கொள்கின்றனர் என எண்ணிக்கை கூறி ஒப்பிட்டுக்காட்டி தமது அரசாங்கமே போரை திறம்பட நடாத்தியது என சிங்கள மக்களுக்கு எடுத்து விளக்குகின்றதேயொழிய தமிழினத்திற்கு எதிரான போர்க் கொள்கையை ஐ.தே.கட்சி கண்டிக்கவில்லை.

அடுத்ததடவை பதவிக்கு வந்தால் போரை செம்மையாக நடாத்துவதற்கு வசதியாகவும் அதேவேளை அம்மையாரின் அரசாங்கம் நடாத்தும் போரை இராணுவ ரீதியாக விமர்சித்து அரசியல் நடாத்துவதற்கு உதவியாகவும் இராணுவ ஆலோசகர் ஒருவரை ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் நியமித்துள்ளது. பிரேமதாசாவின் நண்பனாக இருந்த கிழக்கு மாகாண முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம என்பவரே இந்த ஆலோசகராகும். கிழக்கு மாகாணத்தில் சிங்களப்படை நடாத்திய தமிழ் இனப்படுகொலைகளில் இந்தத் தளபதிக்கும் பெரும் பங்குண்டு. ஐ.தே.கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் போர் நிறுத்தப்பட்டுவிடுமென எண்ணுவது மடமைத்தனமானது.

கொழும்பில் அரசாங்கங்கள் மாறினாலும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை ஆட்சியானது மாற்ற மற்ற ஒன்று என்பது இலங்கைத் தமிழரின் அரசியல் வரலாறு.

தமிழரின் இனப்பிரச்சினையை இராணுவ அணுகுமுறைமூலம் தீர்த்துவைக்க வேண்டும் என்ற பேரினவாத சிந்தனையே சிங்கள அரசின் நிரந்தரக் கொள்கையாகும். இந்த ஆட்சிக் குதிரையை ஓட்டுவதற்காக பதவியில் அமர்த்தப்படும் எந்த அரசாங்கமும் அரசின் போர்க் கொள்கையை தொடர்ந்தும் முன்னெடுத்தே தீரும். இந்தப் போர்க் கொள்கையை மாற்றியமைக்கும் துணிவும் - ஆளுமையும் - நேர்மையும் சிங்களத்தின் அரசியல்வாதிகள் எவர்க்கும் இல்லை. என்ற உண்மையை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இந் நிலையில் தமிழீழ மக்களாகிய நாம் ஒரு உண்மையை ஏற்றுக் கொண்டுசெயல்ப்பட வேண்டும். தமிழீழ மக்கள் மீது சிங்கள அரசு ஒரு ஒட்டு மொத்தப்போரைத் தொடுத்து இன அழிப்பை நடாத்திக் கொண்டிருக்கின்றது. இந்த இன அழிப்புப் போருக்கு முகங்கொடுத்து - களத்தில் சமராட வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திற்குள் எமது இனம் உள்ளது. இந்த இராணுவச் சவாலை எமது மக்கள் எதிர் கொள்ளத்தான் வேண்டும்.

போரில் நாம் வெற்றி பெறுவதும் - நிம்மதியான, கௌரவமான, சுதந்திரமான, எமது மக்களின் வாழ்க்கையும் பிரிக்க முடியாத படி ஒன்று கலந்துள்ளன.

எனவே சிங்களப்படைகளை எமது மண்ணில் தோற்கடிக்கும் போதுதான் எமக்குள்ள அரசியல் உரிமைகளை அநுபவிக்கும் சுதந்திரத்தை நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

---

*(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தது. 05 பேர் கொண்ட சுபேசனின் அணிக்கு இரண்டு சாப்பாட்டுப் பொட்டலங்கள் கிடைத்தன.

தனது தோழர்கள் வேவு பார்த்துவிட்டு களைத்துப்போய் வருவார்களே அவர்களுடன் சேர்ந்து சாப்பிடுவோம் என எண்ணியவன் அந்த உணவுப் பொட்டலங்களை துணி ஒன்றினால் சுற்றி கவனமாக வைத்துவிட்டு படுத்துவிடுகிறான். அவன் முதல் நாள் சாப்பிட்ட சாப்பாடுதான் அன்று மதியம் கழிந்து கொண்டிருந்தது. இவ்வளவு நேர இடைவெளிக்கு ஒன்றோ இரண்டு இளநீர் குடித்திருந்தான். படுத்திருந்த சுபேசனுக்கு வேவுபார்க்கச் சென்ற தோழர்கள் வருகிறார்கள் என்ற செய்தி காதில்எட்ட, நித்திரை விட்டெழுகின்றான். எழுந்திருந்தவன் உடனே தான் எடுத்து வைத்திருந்த சாப்பாட்டுப் பொட்டலங்களைப் பார்க்கிறான், பொட்டலங்களைக் காணவில்லை... யாரோ அந்தச் சாப்பாட்டுப் பொட்டலங்களை எடுத்துச் சாப்பிட்டுவிட்டார்கள். பொங்கி வந்த அழுகையினை சுபேசனால் அடக்கிக்கொள்ள முடியவில்லை. உணவு இருக்கும் என்ற நம்பிக்கையோடு வருவார்களே தன் தோழர்கள் அவர்களுக்கு என்னவென்று சாப்பாடு இல்லையெனச் சொல்வது அவன் துடித்துப் போனான்.

முதல்நாள் மதியம் சாப்பிட்ட சாப்பாட்டுடன் சென்று களைத்துப்போய் வந்திருக்கின்றார்களே எப்படி பசியைத் தாங்கிக்கொள்ளப் போகின்றார்கள். அவர்களுக்கு ஒரு வேளை உணவு கூடக் கொடுக்க முடியவில்லையே எனக் கலங்கினான். அவனது மன வேதனை கண்களால் வெளியேறிக் கொண்டிருந்தது. பெற்றபிள்ளைகள் பசியில் துடிப்பதைப் பார்த்து ஒரு தாய் அழுவாளே அது மாதிரி அழுதான் எங்கள் சுபேசன். அவன் தோழர்கள் எவ்வளவோ சமாதானப் படுத்தியும் சுபேசனின் அழுகை தீர்வதாக இல்லை. நின்ற வேறு தோழர்கள் அங்கு தேடி இளநீர்களைப் பிடுங்கிக் கொண்டுவந்து எல்லோருக்கும் கொடுத்து சுபேசனுக்கும் கொடுத்த போதும் அவன் குடிப்பதாக இல்லை.

"என்ர பொடியள் சரியான பசியாய் இருப்பாங்கள் அவங்களுக்குக் கொடுங்கோ எனக்கு வேண்டாம்." அவன் மறுத்தே விட்டான். இப்படித்தான் என்றும் தன்னைவிட பிறரை நேசிக்கும் மனம் அவனிற்கு.

★ ★ ★

நான் கடைசியாகச் சிரித்து அவனோடு பேசிய அந்த இறுதியான அந்த நேரமே இவனது உணர்வுகள் எவ்வளவு புனிதமாக இருந்தது.

ஆனையிறவு படைத்தளத்திற்குள் ஊடுருவி முதலாவது தடை தாண்டியாகிவிட்டது. தாக்குதல் ஆரம்பிக்க இன்னும் ஒரு சில மணித்தியாலங்கள் இருந்தது. இறுதியாக நாங்கள் பழற்ரின்களையும் உலர் உணவுகளையும் சிரித்து கலகலப்பாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். சுபேசன் மட்டும் ஒவ்வொரு போராளியின் மனதையும் பாசமாய்ப் பார்த்தான். அவனது முகத்தில் லேசாக சோகம் படர்ந்திருந்தது. இன்னும் ஒரு சில மணித்தியாலங்களுக்குள் வெடிக்கப்போகும் அந்த சுபேசன் என்ன சொன்னான் தெரியுமா?.........

'பார் மச்சான் எவ்வளவு சிரிப்பு கலகலப்பாக இருக்கிறான்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில்....' அவனால் அதற்கு மேல் எதுவும் பேசமுடியவில்லை. தீயிற்குள் இருந்து நீர் வடியும் உணர்வு அவனுக்கு. அவன் தனியாக இலக்கை அழிக்கச் சென்றிருந்தால் கவலைப்பட்டிருக்கமாட்டான். தன்னுடன் சேர்ந்து கூடிக் கும்மாளம் போட்டுப்பழகிய இந்த வீரர்கள் இன்னும் சில மணிநேரத்தில் காவியங்களாகப் போகின்றார்களே என்ற ஏக்கம்தான் அவனுக்கு. தன்னை அழிக்கத் துணிந்த அந்த வீரன் இறுதி நேரத்தில் இப்படி ஏங்கினான் என்றால் அவன் மற்றவர்களின் வாழ்வை மற்றவர்களை எப்படி உன்னதமாக நேசிக்கிறான். இப்படி எல்லோரிலும் பாசம் வைக்கும் சுபேசன் இயக்கத்திற்கு வந்ததும் அண்ணனைப் பிரிந்து வாழமுடியாது என்று அண்ணனுடன் கூட இருப்பதற்காக இயக்கத்திற்கு வந்தாளே அவன் தங்கை. அவள் மீது எவ்வளவு பாசம் வைத்திருப்பான்.

தன் தங்கை மீதும் எம் தேசம் மீதும் ஒவ்வொரு மக்கள் மீதும் எங்கள் தலைவன் மீதும் எவ்வளவு பாசம் வைத்திருந்தானோ அது தான் அவனை ஒரு உன்னத கரும்புலி வீரனாக்கியது.

★ ★ ★

சண்டைகளின் சீறல் இன்னும் அடங்குவதாய் இல்லை. தொடர்ந்து வெடிமுழக்கம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" சுபேசன் அழுத்தமாக உரைத்தது வானில் எதிரொலித்தது. எப்போதுமே மற்றவர்களுக்காக சுவாசித்துப் பழகிப்போன அவனது மூச்சு நிச்சயம் எம் தேசத்தை வாழவைக்கும்

# எங்கள் பட்டினிக்கு பதில் என்ன?

**- அ. தீபன் -**




தமிழ் மக்களை சிறீலங்காவின் பிரஜைகளாகக் காட்டி சர்வ தேசத்தின் முன் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அர்த்தமிழக்கச் செய்வதில் சிங்களத்தின் ஒவ்வொரு ஆட்சியாளர்களுமே முனைப்புடன் செயற்பட்டனர்.

தமிழர்களின் பொருளாதார வலுவை அழித்து அவர்களை சிங்கள தேசத்தில் தங்கி வாழச்செய்யும் தங்கு நிலைப் பொருளாதாரத்தை ஏற்படுத்தி தமிழர்களை தாம் விரும்புவது போல் ஆக்கிவிட சிங்களம் விரும்புகின்றது. அதற்காகவே தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமிப்பது, தொழிற்தடைகளை ஏற்படுத்துவது, (கடல்வலயத் தடைச்சட்டம், விவசாய



உள்ளீடுகளுக்கான தடை) உற்பத்திச் சக்திகளை புதிதாக உருவாக்காமல் விடுவது, பொருளாதாரத் தடையை தீவிரப்படுத்துவது போன்றவற்றை தமிழர் பிரதேசங்களில் நீண்ட காலமாக சிங்கள அரசுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இவை எல்லாவற்றையும் யுத்தத்தின் தவிர்க்க முடியாத நடைமுறைகளாகக் காட்டிக் கொண்டு கண்துடைப்பதற்கான நிவாரணக் கொடுப்பனவு நடைமுறையை தமிழர் பிராந்தியங்களில் வைத்திருந்தது. இந்த வகையில் தமிழ் மக்கள் "எங்களுடைய மக்கள்" என்பதுபோல் உலகின் முன்னால் எமது மக்களின் துன்பங்களுக்காக கண்ணீர் வடிப்பதுபோல் நடித்துவரும் சந்திரிகாவின் உண்மை முகத்தை 07.07.1998 முதல் நிவாரண வெட்டைக் கண்டித்து வன்னித் தமிழ்மக்கள் நடாத்திவரும் சாத்விகப் போராட்டங்கள் உலகிற்கு அம்பலப்படுத்தி இருக்கும்.

'உணவு இன்றேல் அரச அலுவலகங்கள் எமக்கு எதற்கு' என்ற கோசங்களுடன் 30.07.1998 முதல் வன்னியிலுள்ள சகல அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் செயலகங்கள் முன்னால் மறியல் போராட்டங்களை நடாத்தி அவற்றை சுமார் ஒரு மாதங்களுக்கு மேலாக செயலிழக்கச் செய்த மக்களுக்கு சந்திரிகா அரசு எந்தவொரு பதிலையும் தராது பாராமுகம் காட்டியது. மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கேட்ட மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளோடு அரச அதிபர்கள் 'நிவாரணம் ஏன் வெட்டப்பட்டது என்ற காரணத்தை அரசாங்கம் எங்களுக்குக் கூறவில்லை. வெட்டுவதற்கான எந்த சிபார்சையும் அரசு எங்களிடம் பெறவில்லை. இந்த நடவடிக்கையை அமுல்ப்படுத்துமாறு நாங்கள் பணிக்கப்பட்டுள்ளோம். எங்களால் மீள் பரிசீலனை செய்வதென்பது அரசுடன் கதைத்த பின்னரே சாத்தியமாகும்.' என்ற பதிலையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டு இருந்தனர்.

'தமிழ் மக்கள் சிறீலங்காவின் பிரஜைகள்' என்று போலிக் குரலெழுப்பும் சந்திரிகா அரசு தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு என்ன பதிலளித்தது? தனது பிரதிநிதிகளான அரச அதிபர்களுடன் கலந்தாலோசிக்காது அவர்களின் சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்ளாது, மக்கள் பெற்றுவந்த நிவாரண உதவியை எந்தவித காரணங்களும் இல்லாது ஈவிரக்கமின்றி வெட்டித் தள்ளிய அரசு, மக்கள் அனுப்பிய மகஜர்களுக்குக்கூட பதிலளிக்காது மௌனம் காத்து வருகிறது. அரசிடம் இருந்து பதிலை எதிர்பார்த்தபடி அரச அலுவலகங்களின் முன்னால் உண்ணாவிரதம் இருந்து தம் பட்டினியின் முடிவிற்காகக் காத்திருந்த மக்களின் போராட்டத்தை சந்திரிகா அரசு இறுதிவரை கணக்கிலெடுக்கவில்லை. 1961-ம் ஆண்டு யாழ் கச்சேரியில் 21 நாட்களாக "நீதிமன்ற மொழி மசோதா"விற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடாத்திய தமிழ் மக்களின் போராட்டத்தை அவர்கள் மீது இராணுவத்தை ஏவி விரட்டியடித்த சந்திரிகாவின் தாயாரின் அரசு. இன்று அச் செயற்பாட்டைச் செய்வதற்கு இந்தப் பகுதியில் இராணுவத்தின் இருப்பு இல்லாமல் இருந்ததே சந்திரிகாவிற்கு பெரும் குறையாக இருந்திருக்கும்.

சுமார் ஒருமாதம் வரை அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் எந்த ஒரு சாதகத்தன்மையையும் கண்டுகொள்ளாத மக்கள் தொடர்ந்தும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்டனர். "நாங்கள் உணவு இன்றிப் பட்டினியால் சாவதை சிங்கள அரசு விரும்புகிறது எங்களைப் பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்ற மனிதநேயத்துடன் உதவுங்கள்" என சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டு அவர்களின் அலுவலகங்களின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டங்களை நடாத்தினார்கள்.

"நாங்கள் உங்கள் உணர்வுகளை புரிந்து கொள்கிறோம். ஆனால் எங்களால் உணவு வழங்க முடியாது. நாம் அரசுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி உணவு தவிர்ந்த ஏனைய உதவிகளை வழங்கவே வந்தோம். உணவு வழங்குவது அரசின்பொறுப்பு" எனக் கூறிய தொணடர் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம், உணவின்றிப் பசியால் சாவினை எதிர் நோக்கும் இந்நேரத்தில் எங்களுக்கு ஏனைய உதவிகள் எதற்கு என்று கேட்ட மக்கள் இருநூறு நாட்களாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயச் செயலகத்தின் முன்னால் தொடர் உண்ணாவிரதப் போராட்டங்களை நடாத்தி வருகிறார்கள்.

தொடர் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகி தொழில் செய்வதற்கான வழிவகைகளையும் இழந்து சிங்களத்தின் இராணுவ நடவடிக்கைகளால் காடுகளுக்குள் தள்ளப்பட்டுவிட்ட மக்களின் இப் போராட்டத்திற்கு முடிவு எப்போது கிடைக்கப்போகிறது?

காலத்திற்குக்காலம் சிறீலங்கா அரசு தமிழ்ப்பகுதிகளில் செய்து வந்த குடியேற்றங்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சொந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிலேயே குடியேறியிருந்தார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக சந்திரிகா அரசின் சூரியக்கதிர் நடவடிக்கை காரணமாக யாழ். குடாநாட்டிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் தஞ்சம் அடைந்துள்ளனர். இந்நிலையில் சத்ஜய, எடிபல, ஜயசிக்குறுய், ரிவிபல, ரணகோஷ போன்ற இராணுவ நடவடிக்கைகள் கிளிநொச்சி, மன்னார், மாங்குளம், ஒட்டுசுட்டான், வவுனியா போன்ற இடங்களில் இருந்தும் மக்களை மேலும் இடம் பெயரவைத்தன.

| வீடமைப்புத்திட்டம் | செலவு செய்த தொகை (மில்லியன் ரூபா) |
|---|---|
| ஜனஉதவ நிகழ்ச்சித்திட்டம் | 142 |
| கிராமிய வீடமைப்புத்திட்டம் | 190 |
| செவன வீடமைப்பு | 118 |
| நகர வீடமைப்பு | 18 |
| இடர் வீடமைப்பு | 04 |
| மீன்பிடி வீடமைப்பு | 10 |

**அட்டவணை 1**

**குறிப்பு: இவற்றைவிட வீடமைப்புக்கடனாக 8,438 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.**

இவ்வாறு தொடர் இடப்பெயர்வுகளால் அவலங்களைச் சந்தித்த மக்களுக்கு சிறீலங்கா அரசு எந்தவொரு அடிப்படை உதவிகளையும் செய்து கொடுக்கவில்லை. அவசர புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டம் ஊடாக சிங்கள தேசத்தில் பேருதவிகளை சிங்கள மக்களுக்குச் செய்து வரும் அரசு. இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்டு ஏதிலிகளாய் நிற்கும் இம்மக்களின் பட்டினிக்கு உணவு நிவாரண உதவியைக் கூடச் செய்யமறுக்கின்றது. சிங்களப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான மில்லியன் ரூபாய்களை வீடமைப்பு கடன்களாகவும் பல நூறு மில்லியன் ரூபாய்களை மானிய உதவித்திட்டங்களுக்காகவும் செலவு செய்யும் அரசு, ஏதிலிகளாக நிற்கும் இந்த மக்களுக்கு ஒரு ரூபாவைத்தானும் இதற்காகச் செலவிடவில்லை. 1997ஆண்டு சிறீலங்காவின் ஏனைய பகுதிகளில் வீடமைப்புக்காக அரசு செலவிட்ட தொகை அட்டவணை 01 இல் தரப்பட்டள்ளது.

தொடர்ச்சியான இடப்பெயர்வுகளால் பல பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்த லட்சக்கணக்கான மக்கள் வன்னியில் குடியேறியதால் வன்னியின் நிரந்தரக் குடியிருப்பாளர்களின் வாழ்நிலைகூட பாதிப்புக்குள்ளாகியது. நுகர்வோரின் அதிகரிப்பால் பொருட்களின் விலை பன்மடங்காக அதிகரித்தது. இந் நிலையில் நிரந்தரக் குடியிருப்பாளர்களில் 1500 ரூபாவிற்குக் குறைவான மாத வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வறுமை நிவாரணமும் 1996 மே மாதம்



**காலத்தால இம்மளவு நேரத்துக்கும் படுத்துத்தான் இருந்தனான். சாப்பாடில்லாமல் தான் படுத்திருந்தனான். என்ர வீட்டை, என்ர பிள்ளைகளாணை நேற்று சோறே காச்சேல்ல. ஒரு தேத்தண்ணி கூட வைச்சுக் குடிக்கேல்ல. என்ர மனிசன் மாங்குளத்தில செல்லடிச்சு ஏலாது... வேலை செய்ய ஏலாது. தகப்பன் இல்லாத பிள்ளையும் மூண்டு. பொம்பிளைப் பிள்ளையள்.**
**சாப்பாடில்ல, மருந்தில்ல இனி மழைவந்தால் எங்களுக்கு இருக்கேலாது வீட்டில. எங்களுக்கு முடிவு தராட்டி நாங்கள் இருப்பம் இவை வாகனத்தை எங்களுக்கு மேல விட்டு ஏத்திச் சாக்கொல்லட்டும்.**

# 200 நாட்கள் மேல் தொடரும் உண்ணாவிரதம்

### அட்டவணை 2

**01.07.1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட நிவாரண வெட்டினால் நிவாரணம் மறுக்கப்பட்ட குடும்பங்கள்**

| மாவட்டம் | வழங்கப்பட்டவை குடும்பங்கள் | 01.07.1998 முதல் வழங்கப்பட்டவை குடும்பங்கள் | நிவாரண வெட்டுக்குள்ளான குடும்பங்கள் |
|---|---|---|---|
| கிளிநொச்சி | 18,857 | 8,889 | 9,968 |
| முல்லைத்தீவு | 32,869 | 13,333 | 19,536 |
| மன்னார் | 77,169 | 4,444 | 12,725 |
| வவுனியா | 8,599 | 5,566 | 3,033 |
| மொத்தம் | 77,494 | 32,232 | 45,262 |

முதல் அரசால் நிறுத்தப்பட்டது. இதற்காக சமுர்த்தித்திட்டம் நாடெங்கிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமுர்த்தித்திட்டத்தை தமிழ்ப்பகுதிகளில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தடைவிதித்துள்ளது. சிறீலங்கா அரசின் இந்தப் புறக்கணிப்பால் வறுமை நிவாரணம் பெற்று வந்த 65 வீத மக்கள் நினைக்கமுடியாத அவலத்தை அனுபவித்து வருகின்றார்கள்.

1996ம் ஆண்டு காலப்பகுதியில் சூரியக்கதிர் 02 நடவடிக்கை காரணமாக வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் இராணுவ ஆக்கிரமிப்புப்பகுதிக்குள் இழுக்கும் அரசின் சதி கருதி அந்த மக்களுக்குரிய நிவாரணக் கொடுப்பனவுகளை அரசு நிறுத்தியது. அதைத் தொடர்ந்து 1998 மே மாதத்தில் சூரியக்கதிர் மற்றும் சத்ஜய நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் உட்பட அனைவருக்குமான நிவாரண வெட்டு நடவடிக்கை ஒன்றை எவ்வித காரணங்களுமின்றி அரசு அமுல்ப்படுத்தியது. இதன் காரணமாக நிவாரணம் வழங்கப்படவேண்டிய 1, 21, 077 பேருக்கு நிவாரணம் வெட்டப்பட்டது. இதன் பின்னர் ஜயசிக்குறுய் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களையும் சேர்த்து 1, 85, 574 மக்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டது. இந்த விபரங்கள் அட்டவணை - 02 இல் தரப்பட்டுள்ளன.

தற்போது அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணம் பெறுவதற்கான நிபந்தனையின்படி இடம்பெயர்ந்தவர்களின் மாத வருமானமாக 1500 ரூபாவிற்குக் குறைவான தொகை பெறுபவர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படுகின்றது. (வன்னி மக்கள் இதற்கும் கூட புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.) சிறீலங்கா முழுவதுக்கும் பொதுவானதொரு நடைமுறையாக இருக்கிறது.

சிறீலங்காஅரசின் இந்த நடைமுறை வன்னி மக்களின் வாழ்வியல் நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வாக அமையும்? மாத வருமானமாக 1500 ரூபாவிற்குக் குறைவான வருமானம் பெறுபவர்களுக்கே நிவாரணம் வழங்குவது என்ற பொதுவான நடைமுறை வன்னி மக்களின் வாழ்நிலைக்கு எந்த வகையில் தீர்வாக முடியும்?

ஏனெனில் சிறீலங்காவின் ஏனைய பகுதிகளைவிடவும் வன்னியில் பொருட்களின் விலை அதியுயர்வானதாக உள்ளது. இதற்கு அரசின் தடைகளே காரணம். 1500 ரூபாய் வருமானமே வாழ்வதற்கு அடிப்படையிலேயே போதுமானதாக இல்லாத வன்னியில், அனைத்தையும் இழந்து அகதிகளாக எதுவுமற்று நிற்கும் மக்களுக்கு நிவாரணத்தை வெட்டுவது எந்த வகையில் மனிதத்துவமானது?

வன்னியில் பொருளாதார முதுகெலும்பாக இருந்த விவசாயத்தை மேற்கொள்வதற்கும் சிறீலங்கா அரசு முட்டுக்கட்டையாக இருக்கிறது. வன்னியின் பிரதான நெற்செய்கை நிலங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டும், ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டும், பயிரிடப்பட முடியாத நிலையில் இருக்கின்றது. எஞ்சிய நிலப்பகுதிகளில் நெற்செய்கை பண்ணுவதற்கும் அரசால் விவசாய உள்ளீடுகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. ஓரளவு கிடைக்கக்கூடிய உள்ளீடுகளும் அதிக விலைக்கு விற்கப்படுவதினால் அவற்றை வாங்குவதற்கு விவசாயிகள் பொருளாதார வளமற்றவர்களாக இருக்கின்றார்கள். மூன்று மாதங்கள் மட்டுமே மழைவீழ்ச்சி கிடைக்கும் வன்னியில் விவசாயத்திற்கு ஒரு முதுகெலும்பாக இருப்பது நீர்ப்பாசனக்குளங்கள்தான். இங்குள்ள 48 பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் 60வீதமானவை

### அட்டவணை 3

**தற்போது உள்ளபடியான நிவாரண வெட்டு நடைமுறையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்.**

| மாவட்டம் | 98.07.01ற்கு முன் நிவாரணம் பெற்ற குடும்பங்கள் | 98.07.01 முதல் வழங்கப்படும் குடும்பங்கள் | 98.12.01 முதல் மேலதிகமாக நிவாரணம் பெறும் குடும்பங்கள் | 98.07ற்கு முன்னருள்ள படி பாதிப்புற்ற குடும்பங்கள் | 'ரணகோ' 1.2 நவடிக்கையால் இடம்பெயர்ந்த நிவாரணம் மறுக்கப்பட்ட குடும்பங்கள் |
|---|---|---|---|---|---|
| கிளிநொச்சி | 18,857 | 8,889 | 5,146 | 4,822 | 2,127 |
| முல்லைத்தீவு | 32,869 | 13,333 | 8,619 | 10,917 | 799 |
| மொத்தம் | 51,726 | 22,222 | 13,765 | 15,739 | 2,92 |

போதிய பராமரிப்பின்றி தூர்ந்து போயுள்ளதால் 6, 350, 000 கன அடிகளுக்கு மேற்பட்ட நீர் வீணே கடலுக்குப் போய்ச்சேர, சில காலங்களில் வரட்சிநிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் 1997 இல் சிறீலங்காவின் ஏனையை பகுதிகளில் நீர்ப்பாசன வசதிக்காக ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 480 வீதம் செலவிட்ட சிறீலங்கா அரசு வன்னிப் பகுதிக்காக ஏக்கருக்கு 70 ரூபாவைத்தானும் செலவு செய்யவில்லை. சிறீலங்காவின் ஏனைய பகுதிகளில் வழங்கப்படும் வெள்ள நிவாரணம், வரட்சி நிவாரணம் என்பவை கூட இங்கு வழங்கப்படுவதில்லை.

கடற்றொழிலில் ஈடுபடும் கரையோரப் பகுதி மக்கள் சிறீலங்கா அரசின் கடல் வலையத் தடைச்சட்டம் காரணமாக நீண்ட காலமாக தொழில்வாய்ப்பிழந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். கரையோரக் கடலுக்கு தொழிலுக்காகச் சென்ற பலர் கடற்படையினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களுடைய குடும்பங்கள் உழைப்பாளிகளை இழந்து பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றன. இந்நிலையில் சிறீலங்காவின் ஏனைய பகுதிகளில் வழங்கப்பட்டு வரும் மீனவ நிவாரணம் தமிழ் மக்களிற்கு மட்டும் மறுக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் அதிக மனித உழைப்பிலும், உயிரிழப்புக்களுக்கும் மத்தியில் மக்களின் கைகளுக்கு வந்து சேரும் சிறுதொகைப் பணம் உணவுத்தேவை என்பதற்கப்பால் வன்னியில் நிலவும் கொடிய நோய்களால் மருத்துவத்திற்காகவே மாதாந்தம் செலவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தவிர்க்கமுடியாமல் ஏற்படுகின்றது. அரச மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துவகைகள் போதியளவு அனுப்பி வைக்கப்படாமை, மக்களின் இத்தகைய நெருக்கடிக்கு மேலும் காரணமாகிறது. அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான உடையின் விலை சாதாரண மக்களின் கொள்வனவுச் சக்திக்கு அப்பாற்பட்டதாகவேயிருக்கிறது.

உணவுப்பண்டங்களைப் பொறுத்தவரை உயிலங்குளம் கொண்டு வரப்பட்டு மக்களின் கைகளிற்கு எட்டும்போது அது பலவகையிலும் விலை உயர்விற்கு உள்ளாகிறது. இராணுவச் சோதனைச்சாவடி உட்பட ஏனைய இடங்களில் பொருட்களை ஏற்றியிறக்குவதற்கான செலவு, பழுதடைந்த வாகனங்களுக்கு, ஏற்படும் பராமரிப்புச் செலவு, பழுதடைந்த வன்னி வீதிகளில் போக்குவரத்துச் செய்ய வேண்டியிருப்பதால் ஏற்படும் செலவு, வாகனங்களிற்கான அதியுயர் எரிபொருட்செலவு, சரக்குகளிற்கு ஏற்படும் சேதாரம் என எல்லாமே நுகர்வோர்மீதே சுமத்தப்படுகின்றது.

இந்நிலையில் வன்னிப் பகுதிகளுக்காக பாதுகாப்பு அமைச்சால் அனுமதிக்கப்பட்ட ஐம்பது லொறி உணவுப் பொருட்களைக்கூட இங்கு கொண்டுவந்து சேர்க்க முடியாத நிலையே காணப்படுகிறது இதைச் சாட்டாக வைத்து வன்னி மக்களை அங்கு அனுமதித்துள்ளோம் என சிறீலங்கா அரசு பிரச்சாரம் செய்து வருகிறது. இதன் உண்மைநிலை என்ன?




வன்னியில் உற்பத்திச் சக்திகள் உருவாகுவதற்கு அரசு தடைவிதித்துள்ளது. மக்கள் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு எந்த வழிவகைகளும் இல்லாது போய்விட்டது. வன்னியில் இன்று வாழும் பெருந்தொகையானோர் இடம்பெயர்ந்து ஏதிலிகளாய் நிற்கும் மக்கள். வன்னியில் நிரந்தரக் குடிமக்களில் 65 வீதமானோர் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள். இதனால் அரசு அனுமதித்துள்ள பொருட்களைக் கூட வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய கொள்வனவுச் சக்தி இவர்களிடம் இல்லாதது பெரும்துயரம். இத்தகைய சூழலில் மக்கள் வெளியில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வதையும் அரசு மட்டுப்படுத்தியுள்ளது. 25.000 ரூபாவிற்குமேல் ஒரு நபர் வன்னியினுள் பணத்தினைக் கொண்டு செல்லக்கூடாது என்பது அரசின் விதிமுறை. இதை இராணுவம் நடைமுறைப்படுத்துகிறது.

இந்நிலையில் அரசு ஒப்புக்கொண்டுள்ள 1500 ரூபா வருமானத்திற்கு உட்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தில் 18, 665 குடும்பங்களுக்கு இன்னமும் நிவாரணம் வழங்கப்படாது அரசு அம்மக்கள் மீது மறைமுகமான வன்முறையைப் பிரயோகித்து வருகிறது. விபரங்கள் அட்டவணை 03ல், சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கு முன்னால் 200 நாட்களாக பட்டினி கிடக்கும் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிட்டவில்லை. இம்மனிதாபிமான அமைப்புக்கள் இது தொடர்பாக அரசாங்கத்திற்கு உறுதியான அழுத்தங்களைப் பிரயோகித்ததாகவோ, உண்மை நிலைகளைச் சுட்டி ஒரு அறிக்கையைத் தானும் விட்டதாகவோ இதுவரையில்லை. இவ்வமைப்புக்களின் தலைமையகங்கள் இம்மக்களின் விடுதலைக்காகப் போராடும், விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனவே தவிர அரச பயங்கரவாதத்தால் அவலப்படும் இம் மக்களுக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இவற்றால் எடுக்கப்படவில்லையென்பது வேதனைக்குரியது.

ஒடுக்குமுறைக்கெதிராக விடுதலை வேண்டி நிற்கும் மக்கள்மீது உணவை ஆயுதமாகப் பயன்படுத்தும் அரசின் ஈனச் செயலிற்கு தமிழ் மக்கள் அடிப்பணிந்து விடுவார்கள் என்று அரசு நம்புகிறதா?!

**இந்த மாசம் பெரிய கஷ்டம். கஷ்டத்தின் மேல் கஷ்டம் ராசாத்தி. பெரிய பெருத்த குடும்பத்துக்காரர் அம்மா. இந்த ரேசனும் இனி இல்லாட்டி 25 கிராம் சர்க்கரையும் 2 அலரிக்கொட்டையோடும் ஆ..... ஆமோதிக்க வேண்டிய கட்டத்தில் இருந்து நாம் தத்தளிக்கிறோம். எல்லா மக்களும் நாங்கள் தவிச்சுக் கொண்டிருக்கிறோம் முறியாத கோட்டை எல்லாம் வலிச்சு அவயிட்டை இவயிட்டை மாறிச்சாறி சீவிக்க வழியே இல்லை.**






06-06-99 அன்று யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்துள்ளார்

**கப்டன் சித்தார்த்தன்**
**தங்கவேலாயுதம் கிருபாகரன்**
யாழ். மாவட்டம்
த.மு. 10ம் கட்டை விசுமவடு

13-06-99 அன்று மணலாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப். லவேந்திரன்**
**கமலநாதன் திவாகரன்**
மட்டக்களப்பு மாவட்டம்

**லெப். விடுதலை**
**கந்தசாமி கேதீஸ்குமார்**
திருமலை மூதூர்

**வீரவேங்கை புகழ்மதி**
**உலகநாதர் பாலகுமார்**
யாழ். மாவட்டம்

**வீரவேங்கை சுதா**
**சின்னத்தம்பி நாகேஸ்வரன்**
யாழ். மாவட்டம்

15.06.99 அன்று தமிழீழ கடற்பரப்பில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**கப்டன் இளங்கோ**
**சின்னத்தம்பி சுபாஸ்கரன்**
யாழ். மாவட்டம்
த/மு: தருமபுரம்

17-06-99 அன்று நெடுங்கேணிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை மணாளன்**
**சிறிமுருகன் தவேஸ்வரன்**
திருமலை மாவட்டம்

**வீரவேங்கை கண்ணியவான்**
**தவரட்ணம் சோபன்**
1ம் வட்டாரம் முள்ளியவளை

19-06-99 மன்னார் திராட்டிக்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப்.கேணல் பட்டேல் அல்லது இசைவாணன்**
**பொன்னையா குணலிங்கம்**
திருமலை மாவட்டம்
த.மு. றோயல் திட்டம், வல்லிபுரம், புதுக்குடியிருப்பு

**கப்டன் சூரியகுமார்**
**கணபதி தவஞானம்**
யாழ். மாவட்டம்
த.மு. புன்னை நீராவியடி, விசுவமடு

**வீரவேங்கை கவியரசன் அல்லது யோகேந்திரன்**
**சோமசுந்தரம் இராமகிருஸ்ணன்**
மாத்தளை
காக்கையன்குளம், வவுனியா

20-06-99 அன்று பரந்தன் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்

**கப்டன் தமிழ்ச்செல்வன்**
**ராதாரமணன் ரூபசிங்கம்**
928 திருநகர், கிளிநொச்சி
த.மு. மல்லாவி

20.06.99 அன்று யாழ். கொக்குவில் பகுதியை சுற்றிவளைக்க முற்பட்ட போது சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

**வீரவேங்கை இன்பன் அல்லது கலையரசன்**
**தருமலிங்கம் சுகந்தன்**
யாழ். மாவட்டம்
த/மு: திருநகர், யோகபுரம், மல்லாவி

**வீரவேங்கை மணிவண்ணன்**
**சர்வானந்தம் ராஜ்குமார்**
யாழ். மாவட்டம்

21-06-99 அன்று மன்னார் திராட்டிக்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை தமிழ்க்கவி**
**சாமித்தம்பி உதயராசா**
மட்டக்களப்பு மாவட்டம்.

22-06-99 அன்று மாங்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் ஒரு போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்

**வீரவேங்கை கமலா**
**நல்லதம்பி விஜிதா**
மட்டக்களப்பு மாவட்டம்

26-06-99 அன்று பள்ளமடுச் சந்தியை கைப்பற்றும் நோக்கில் சிறீலங்கா படையினர் பெருமெடுப்பில் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியை தடுக்கும் போது ஏற்பட்ட நேரடி மோதலில் 22 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளார்கள். கிடைக்கப்பெற்ற ஐந்து போராளிகளின் விபரம்.

**வீரவேங்கை ராவீனன்**
**ராசரத்தினம் ரஜீந்திரன்**
யாழ். மாவட்டம்

**வீரவேங்கை அருமைநிலா**
**சிவராசா சிவரஞ்சனி**
இராசநாயகம் வீதி, தச்சைமடு, ஒட்டிசுட்டான்

**வீரவேங்கை மதனன்**
**சபாரத்தினம் சந்திரகுமார்**
கோவில் குஞ்சுக்குளம், ஓமந்தை, வவுனியா.

**வீரவேங்கை ரஜீவன்**
**பழனிச்சாமி நாகராஜா**
வவுனியா

**வீரவேங்கை புகழன்**
**ராசு தனபாலசிங்கம்**
புளியமடு நெடுங்கேணி
த.மு. நலன்புரிநிலையம் தச்சனா மருதமடு மன்னார்
ஓலுமடு

29.06.99 அன்று மன்னார் பெரியமடுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை சித்திரா**
**சின்னத்துரை சசிகலா**
219, மாணிக்கபுரம், விசுவமடு.




# தமிழீழ வைப்பகத்தில் ஓர் உலா

சென்ற இதழ் தொடர்ச்சி

எமது மாணவச்சிறார்களையும், நாட்டையும், அதன் சுபீட்சத்தையும் நசுக்கும் அரசின் மிலேச்சத்தனத் தாக்குதலிற்கான ஆயுதக் கொள்வனவிற்கும்; நடவடிக்கைச் செலவுகளிற்கும் எம்மை அறியாமல் நாமே பணவுதவி செய்யும் அவல நிலைகளும் எண்ணிப் பார்க்க வேண்டும். வைப்பகத்திற்கு தமது பெயரில் தாமே தேட்டக்கணக்கை திறக்க அகப்பூரிப்புடன் வந்திருந்த மாணவமணிகளை அணுகி அளவளாவியபோது.......

எதிர்காலத்தில் எமக்கென்று ஒரு தொகை பணம் சேமிக்கப்பட்டிருக்கும். ஏனைய வங்கிகளில் சேமிப்புக்கு வழங்குகின்ற வட்டியைவிட தமிழீழவைப்பகம் கூடிய வட்டியை வழங்குகின்றது. பாடசலை உபகரணங்கள் பரிசுத்திட்டத்தில் உள்வதால் எமக்குப் பயன்படுகின்றது. நாங்களே எமது எதிர்காலத்தில் முதலிடக் கூடிய வாய்ப்பும், உயர்கல்விகளிற்கான கடன் வசதிகளும் கிடைக்கின்றன.

என தமது எண்ணங்களை மாணவச் செல்வங்கள் பகிர்ந்து கொண்டனர். மேலும் அவர்கள் 5000 ரூபா விற்கு மேல் 10.000 ரூபா சேமிப்பு செய்பவர்களுக்கு பரிசு வழங்குவதனையும் குறிப்பிட்டனர். மேலும் தமது பாடசாலையில் 18 அகவைக்கு மேற்பட்ட மாணவர்கள் கற்பதனை குறிப்பிட்டதுடன்; அவர்களும் இத் திட்டத்தில் சேர ஆர்வமாக உள்ளதனையும்; அவர்களிற்கான விசேட விதிமுறைகளை மேற்கொள்ளலாம்தானே? எனவும் வினாவினர். தாமாகவே தமது கணக்கைத் திறந்து தமது எதிர்கால மாளிகையில் விளக்கேற்றும் மாணவர்களின் முதுகில் தட்டிக் கொடுத்த நாம், தனது மகனிற்கு தேட்டக்கணக்கைத் திறக்க வந்த அரச அலுவலகத்தில் பொது எழுதுவினையராக கடமையாற்றும் ஒரு தாயாரின் பக்கம் சென்று கதைத்த போது......

தற்போதைய எமது தேசத்தின் போர்ச் சூழ்நிலையில் எம்மால் தொடர்ந்து தொழில் புரிந்து வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது கேள்விக்குரியதாகும். இந்நிலையில் எமக்கு வருமானம் கிடைக்கும்போது இத் தேட்டத்தில் மகனுக்காக சேமிப்புச்செய்தால்; எதிர்காலத்தில் அவன் கல்வி தடையின்றி தொடர முடியும். மேலும் திடீரென ஏற்படும் மருத்துவச் செலவை எமது வருமானம் தாங்க முடியாத நிலையில் இச்சேமிப்பு கைகொடுக்கும். இதனால் எமது பிள்ளை பாதுகாக்கப்படுகின்றான். என தனது உணர்வினை வெளிப்படுத்தினார்.

# எம்மை அழிக்க

## எமது சேமிப்புக்கள் பயன்படும் நிலை என்று மாறும்?

சி.சிவரூபன், த.சத்தியன்


நாட்டின் எதிர்காலச் செல்வங்களின் வளர்ச்சிக்கு அடிக்கல் நாட்ட முற்படும் உணர்வுகளை எம்மிடையும் தொற்றச் செய்து கொண்ட நாம்; தமிழீழ வைப்பகத்தின் நடுவப்பணியக ஆளுகைமேலாளர், அவர்களைச் சந்தித்த போது........

பதினெட்டு அகவைக்கு உட்பட்டவர்கள் அல்லது அவர்கள் சார்பாக பெற்றோர்கள் பாதுகாவலர்கள் முதலில் 250 ரூபாவும் அதற்குக் கூடிய தொகையாகவும் வைப்பில் இட்டு இத்தேட்டக்கணக்கை ஆரம்பிக்கலாம். பின் ஏனைய வைப்புக்களின் போது 50ற்கு குறையாமல் வைப்பிடலாம். எனத் தொடர்ந்த ஆளுகைமேலாளரை இடைமறித்து வைப்பாளர்களிற்கு 18 அகவையின் பின் இத் தேட்டம் சாதாரண தேட்டத்திற்கு மாற்றப்படும். அல்லது விரும்பில் மீளப்பெற்றுக் கொள்ள முடியும். 18 அகவைக்குட்பட்ட வைப்பாளர்கள் கல்வி அல்லது மருத்துவத் தேவைகளிற்கு மட்டும் பகுதியாகவோ முழுமையாகவோ மீளப் பெறலாம். 17 அகவைக்கு மேற்பட்ட சேமிப்பாளர்களிற்கு உயர்கல்விக்கும் தொழில் முயற்சிக்கும் வைப்பகத்தால் கடன் வசதி அளிக்கப்படும். என்றவரை இடைமறித்து 18 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கும் அவர்களின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும் வண்ணம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா என வினவ 18 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் சாதாரண தேட்டக் கணக்கில் தம்மை இணைத்து எமது வைப்பக வழமையாளர்களாக இருக்கும் பட்சத்தில்; வளர்ந்துவரும் வைப்பக நடவடிக்கையின் மூலம் அடுத்துவரும் ஆண்டுகளில் இம் மாணவர்களிற்கான கல்வி உயர்கல்வி தொழில் முயற்சிக்குமான திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளோம். நாங்கள் இடைநிலை, உயர்தரப் பாடசாலைகள் மட்டத்துடன் நின்று விடாமல் பாலர் பாடசாலைகள் அரசசார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் முன்பள்ளிகள் போன்றவற்றிலும் தொடர்பு கொள்வதற்காக ஒவ் பாடசாலை... ...த்தில் உள்ள இவ் ஆரம்பப் இணைக்க... கொண்டு வருகின்றோ... விபரங்களைத் ...பகத்தின் எமது நாட்டுப் ...வ்வகைப் ...தளத்திற்கு உரமூட்டும் வகையால... ...பாடுகளை விளக்கியவரிடம் விடைபெற்றோம்.

எமது நாட்டின் பணத்தைக் கொண்டு இயன்றவரை எமது மக்களே உச்சப் பயனை பெறக்கூடியவகையில் மேற்கொள்ளப்படும் தமிழீழ வைப்பகத்தின் திட்டங்கள்; தேசத்தின் விடியலுக்கு உரமூட்டும் என்பதில் ஐயமில்லை. அரச வங்கிகளில் நாம் வைப்பில்இடும் பணமே திறைசேரியால் வரவுசெலவுத் திட்டத்தில் துண்டு விழும் பாதுகாப்புச் செலவிற்கு திறைசேரி மாற்று உண்டியல் என்ற போர்வையில் வர்த்தக வங்கிகள், சேமிப்பு வங்கிகள், ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றில் இருந்து கடனாகப் பெற்று ஈடுசெய்யப்படுகின்றது.

இவ்வாறு ஈடுசெய்யப்படும் பாதுகாப்புச் செலவின் உண்மை வடிவம் என்ன? இது தான் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு வாரி இறைக்கப்படும் செலவுப்பணம்.

கேப்பாபுலவு மானாவாரி வயலில் விளைந்த நெல்லுக்கு பணம் பெற்ற கந்தப்பு விடிந்ததும் பணப்பையுடன் போனார். சிறீலங்கா அரச வங்கிக்கு தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ்உள்ள மேட்டு 'துருசின்' வலது கரை 4ம்கண்ட 5ஏகக்ர் வயல் கந்தப்பரின் உரித்துக்காணி இவ்வயல்க்காணி கடந்தவருடங்களில் வேளாண்மை இன்றி ஏன் உள்ளது? ஆக்கிரமித்த பகுதியையும் அதனைச் சார்ந்த இராணுவமுகாம்களின் பாதுகாப்புக்கு என அம்மேட்டுத்துருஸ் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டதால் எமை அழிக்க தமது சேமிப்புக்களும் எமது பணங்களும் பயன்படுவதை கந்தப்பு அறிவாரா? இந்நிலை என்றுதான் மாறுமோ?



## தேசத்திற்கான நேசிப்பில் இத்தனை பிரகாசிப்பா?...

*தாய் மடியில் பூத்த*
*சீரிளமை சொட்டுகிற*
*சின்னஞ்சிறு மலர்தான் நீ.*
*தமிழ்ச் சந்ததியின்*
*இறைமைக்கும் உரிமைக்கும்*
*பின்னுரித்தாளன் நீ*
*தொப்புள் கொடி உறவு*
*தமிழுக்கும் உனக்கும்*
*மென் பாதங்கள் எடுத்து*
*மெல்ல நீ நடந்தால் மண் நிமிரும்.*
*உன் பிஞ்சுக் கரங்களில் தான்*
*இந் நாட்டின் எதிர்காலம்.*
*என் சிறுமலரே எழுக!*
*அன்பின் அர்த்தமே!*
*என் வயதில்.......*
*சரி பாதி கூட உனக்கில்லை.*
*ஆனாலும் தாயகத்தை*
*காதல் செய்யும் ஆர்வம்*
*விசால இதயம்*
*கள்ளமற்ற இயல்பு எல்லாமே*
*முன்யாணறியாத புதுமையாக*
*உன்னுருவில் விரிகிறது.*
*இந் நாட்டியற்கை வளம்*
*இதுவென் முதுசமென்ற*
*இறுமாப்பா.......?*



—வேலணையூர் சுரேஷ்—

*கடிவயிற்றுப் பசியகற்ற....*
*முடியுமென்ற தற்துணிவா.........?*
*உன் மென் விழிகள் உணர்த்தும்*
*சேதியென்ன*
*தேசத்திற்கான நேசிப்பில்*
*இத்தனை பிரகாசிப்பா.....?*
*புலர்விப்பதற்கான முகூர்த்தத்திற்காக*
*இவ்வளவு காத்திருப்பா.......?*
*அந்தத் "தேச தரிசனம்"*
*மீதான உன் கரிசனை*
*எம்மை உயிர்ப்பிக்கின்றது.*
*இருள் விலக வேண்டிப்*
*பிரார்த்திப்பதற்காய்!*
*பிரார்த்திப்போம் நாமும்*
*அந்த இனிய தேச தரிசனத்திற்காய்!*

# அலை மோதும் கரையோரம்...

நீலக்கடலில் வெண் நுரைகளாய் [illegible] ...லி கரை [illegible] மீனவத் தொழி[illegible]ளின் ஒலி இனிய இசையாய்க்கேட்டது. இவற்றையெல்லாம் விட தரனின் ஆழ்மனதில் கடந்த காலச் சம்பவங்கள் அழியாத நினைவுகளாய் மேலெழுந்து கொண்டிருந்தன...

அக்கடலோரக் கிராமம் எப்போதும் அமைதியாய் இருக்கும். தென்னங்கீற்றுக்களின் சலசலப்பும், அலையோசையும்தான் கிராமத்தின் ஓசைகளாய் எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும். அம் மக்களின் வாழ்வு துன்பத்தை அறியாமலே கழிந்து கொண்டிருந்தது. தரன் தந்தையோடு தொழிலுக்குப் போவான். நாளும் துடுப்பு வலித்து முறுக்கேறியது அவன் உடல்மட்டும்தான். அவனது இதயம் மென்மையான பூவிதழ் போன்றது.

தினந்தோறும் கடற்கரைக்கு மீன் தெரியவரும் சிந்துவின் செயற்பாடுகள் தரனின் இதயக் கண்ணாடியில் ஓயாது துலங்கியது. அர்த்தமோ வடிவமோ இல்லாத அவ்வுணர்வு மென்மையானது. நுட்பமானது தன்னை அறியாமலே மற்றவர் மீது நேசம் கொள்ளத் தூண்டுவது. தரனும் அவ்வகையான உணர்வினுள் சிக்குப்பட்டுக்கொண்டான். மேற்கு வானம் சூரியனை உள்வாங்கிக் கொள்ளும் அமைதியான கருக்கல் பொழுதுகளில் தான் தரன் சிந்துவின் அன்பு முகையவிழ்ந்து மணம்பரப்பத்தொடங்கியது.

கடலோடி கடலாண்ட தமிழ்ப்பரம்பரையின் எச்சங்கள் மீது சிங்களப்பேரினவாதம் கொடுமைகள் புரியத் தொடங்கியபோதுதான் தமிழ் மக்களின் வாழ்வும் அவலமாய்ப்போனது. இத் துன்பப் புதைகுழிக்குள் தரனது கிராமமும் புதைந்து போகத் தொடங்கியது.

துன்பமே அறியாது வாழ்ந்த அம்மீனவ மக்களின் வாழ்க்கை நாளும் துன்பமாகவே புலர்ந்து மறைந்து கொண்டிருந்தது. ஐந்தடி உயிருள்ள உடல் நடமாட உணவு அவசியம் என்பதால் உயிரைக் கையில் பிடித்தபடி தொழிலுக்குப் போவார்கள். உயரக் கடலில் எதிரியின் உயிர் விழுங்கும் கடல்க்கலங்கள் உலா வரும். மரணத்தை எண்ணியபடி அம்மக்கள் கடலுக்குள் மரமிறக்கிப் பேவார்கள். திடீரென நெருப்புக் கோளங்கள் அவர்களை நோக்கிவரும். காயத்தோடு கரையேறுபவர்களும், உப்பிமிதப்பவர்களும், காணாமல் போவோரும் என மறுநாள் அவர்களின் அவலப்பட்டியல் நீளும்.

அன்றும் அப்படித்தான். தரனின் வீட்டில் அடுப்பு எரியவில்லை. ஆனால் அவர்களின் வயிறுகள் புகைந்து கொண்டிருந்தன. வீட்டில் வாழும் உயிர்களின் நினைவோடு தரனின் தம்பியும் தந்தையும் மரமிறக்கித் தொழிலுக்குப் போனார்கள்.


ஏக்கத்தோடும் கூப்பிய கரங்களோடும் உறவுகள் தவித்தபடி கரையிருந்தார்கள். அவர்கள் போனநேரத்தில் இருந்து பெரியமுள்ளும், சிறியமுள்ளும் மணிக்கூட்டில் ஒன்றாகச் சந்தித்தவேளை அக்கிராமமே அதிர்ந்தது. 'ஆழ்கடலில் நடக்கும் அவலத்திற்கு கரையிருந்து கதறிப் பயனில்லை என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தும் இரத்த உறவுகள் தவித்தார்கள்.' கொடிய இரவு மறைய இரத்தச் சிவப்போடு காலை புலர்ந்தது.

தாம் கைப்பிடித்த உறவுகளும் பத்து மாதம் சுமந்து வளர்த்த மழலைகளும் ...கடலிற்குள் அழிந்து போனதை எண்ணி கரையிருந்து கதறினார்கள். எல்லாமும் முடிந்து போயின. மாண்ட உறவுகளின் குருதி உறைந்த சுவடுகள் அழியு முன்னே மீண்டும் மீண்டும் அக்கிராமம் அதிர்ந்து கொண்டது. தரனின் மனம் எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்தது.

தரனின் காலை அலை தழுவிச் செல்ல தன்னுணர்வு பெற்றான். நிமிர்ந்து பார்த்தவனின் முன்னால் வழுதி நின்று கொண்டிருந்தான். அவனது இயல்பான மெல்லிய குரலில்.

'தரன் அண்ணா லைன் பண்ணட்டாம்.'

என சொன்னவன் மணலில் கால் புதையப்புதைய ஓடினான்.



நடக்கப்போற சண்டை முக்கியமானது. இந்தச் சண்டைக்கு வலுவான ஆயுதமாய் மூன்று கரும்புலிப் படகுகள் பங்குபெறப்போகுது. அதில் ஒரு படகு எழிலிற்குரியது என்று பொறுப்பாளர் சொல்ல தரன் தன்னுள் அதிர்ந்து கொண்டான்.

'அப்ப... எழில் என்னைவிட்டிட்டு போகப்போறாளா?'

அதன்பின் நடந்தவை ஒன்றும் மனதில் அவனுக்குப் பதியவில்லை. சண்டையை வழிநடத்தும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தபோது அந்தக்கடமையை உவகையோடு ஏற்றுக் கொண்டான். ஆனால் அவனது இதயத்தின் ஆழத்தில் பலமாக வலித்துக் கொண்டிருந்தது.

சண்டைக்குரிய சகல வேலைகளையும் சரி பார்த்துக் கொண்டு வந்தான் தரன். எழிலின் படகிற்கு அருகில்போக எத்தனித்தவனின் கால்கள் தயங்க, நின்று நிமிர்ந்து படகைப் பார்த்தான். வேர்த்து விறுவிறுக்க எழில் வேலை செய்து கொண்டிருந்தாள். தரனின் மனம் அன்றைய சிந்துவை நினைத்துக் கொண்டது. நிமிர்ந்து பார்த்தவளின் கண்கள் தரனைச் சந்தித்துக் கொண்டன. குரல் நடுங்க தன் மனதை கட்டுப் படுத்தியபடி எழிலைப் பார்த்து தரன் கேட்டான்.

'நீங்கள் போகப் போறீங்களா?''

கேள்வி கேட்டவனின் விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தபடியே நிதானமாக 'ஓம் நான் போகப் போகிறேன். என்ர வாழ்க்கையைப் பெரிசா நினைச்சு இலட்சியத்தைக் கைவிட மாட்டன், எனக்கு இலட்சியம் தான் பெரிசு'

எனக் கூறியவள் அவனைப் பார்த்து மென்மையாய்ச் சிரித்துவிட்டுத்தனது வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள்.

தரனிற்குத் திரும்பத்திரும்ப எழிலின் பதிலே எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'நானும் அவளும் ஒன்று சேர்ந்திருந்தால் எங்கட வாழ்க்கை குறுகிய வட்டமாய்த்தான் இருந்திருக்கும். எங்களிற்கு என்று உறவுகள் மலர்ந்திருக்கும். நாளை அவர்களும் எதிரியால் அழிக்கப்படுவார்கள். எங்களின் துயரத்தை அவர்களுக்குச் சொத்தாகக் கொடுப்பதைவிட நாங்கள் இன்றைக்குப் போராடி விடுதலையைப் பெற்றுக் கொடுத்தால் எங்கட அடுத்த சந்ததியினர் மகிழ்வாக வாழ்வார்கள்'

நினைவில் இருந்து விடுபட்ட தரன் தெளிவான மனதோடு சண்டைப் படகில் ஏறினான். எதிரே நீரைக் கிழித்தபடி வந்த எழிலின்படகு இவனது படகிற்கருகே வந்தபோது எழிலின் விழிகள் தரனைப் பார்த்தன.

'இவள் என்னிடம் என்ன சொல்ல விரும்புகிறாள். என்னைப் போல நீங்களும் வாங்கோ என்றா? இல்லாவிட்டால் அந்த நாட்களின் நினைவு மீட்டலா? எது? எதுவுமாய் இருக்கலாம்.'

அப்பார்வை உரைக்கும் செய்தியை அவனால் புரிந்துகொள்ளமுடிந்தது. அந்தக் கணத்தில்.

'தரன் அண்ணா செற் கூப்பிடுது'

என்று வழுதி கூறக் குனிந்து செற்றில் கதைக்கத் தொடங்கியவன் மறு வினாடியே கட்டளைகளைப் பிறப்பிக்கத் தொடங்கினான்.

நீரைக் கிழித்தபடி வேகமாய்ப் படகுகள் எதிரியை நோக்கி விரைந்து கொண்டிருந்தன. முகத்தில் அலை நீர் குளிப்பாட்ட கைகளால் முகத்தைத் துடைத்தபடி எழிலின் படகை உற்றுப்பார்த்தான் தரன். அப்படகு கருமையாய்த் தெரிந்தது. கடைசியாய் எழில் பார்த்த பார்வை மட்டும் நெஞ்சில் படமாய் விரிந்திருந்தது.

'எழிலம்மா நீயும் நானும்... இனி என்றுமே இணையப் போவதில்லை ஆனால் எங்களின் சாவுகளின் பின் வரும் விடியலில்'

நினைவுத் தொடரை அறுத்துக் கொண்டு எதிரி ஏவும் பீரங்கி வேட்டுச் சத்தங்கள் தரனைச் சுறுசுறுப்பாக்கின. சுற்றிச்சுழன்று படகுகள் சண்டைபிடித்துக் கொண்டிருக்க எதிரியின் பீரங்கிப் படகை குறிவைத்துப் போகும்படி கட்டளையிட்டான் தரன். எழிலின் குரல் கம்பீரமாக நிதானமாக ஒலித்தது.

'எங்களுக்கு இலக்குத் தெரியுது நாங்கள் போறம்'

விசையோடு போகும் அப்படகினை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் தரன். அதிர்ந்த அவ்வோசையோடு அந்த எதிரிப்படகு எரியத் தொடங்கியது. தரனின் இதயம் ஒருதரம் நின்று துடித்தது. கண்களுக்குள் பிரவாகம் எடுத்த கண்ணீரும் கடலின் உப்பு நீரும் முகத்தில் வழிந்து கொண்டிருந்தன. வினாடிகள் மணிகளாக சண்டை வெற்றியோடு முடிய சண்டைப் படகுகள் கரையை நோக்கிப் போய்க் கொண்டிருக்க தரன் கடையாரில் நின்று சண்டை நடந்த திசையை வெறித்துப் பார்த்தான்.

கரிய புகை சூழ்ந்த அப்பிரதேசத்தில் அருவமாய் அவனது சிந்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

**- அலையிசை -**

'பார்த்தீங்களா தரன் எப்படி வெற்றியாய் இடிச்சுப்போட்டன் எண்டு' அவள் இப்படிக் கேட்பது போலிருந்தது.

எழிலின் வாழ்வு இன்றோடு முடிந்து போகவில்லை. இனி என்றுமே அவள் இந்தக் கடலினுள் தமிழீழத்தின் வரலாறாய் உயிர் வாழ்வாள்.

விழிகலங்க திடமான முடிவோடு அத்திசையைப் பார்த்துக் கொண்டே தரன் நின்றான். இனி வரும் காலங்களில் அலைதழுவும் கரைகளில் அவளின் நினைவோடு அவன் காத்திருப்பான்.

அன்றைய நாட்களின் நினைவு அவனை உலுப்பும். அவனது அப்பா, தம்பி, எழிலின் தம்பியென்ற ரத்த பந்தங்கள் உப்பி, ஊறி உருச்சிதைந்து கரையை அடைந்த கோரம் நினைவில்வரும்.

அத்துயரங்களின் முடிவாய் அவள் வெடித்துச் சிதறிய நிகழ்வு அவன் இதயத்தை மௌனமாய்க் குதறும். அதன் பின்பும் அவன் கடமைகளுக்காய் உயிர் வாழ்வான். அவரது இலட்சிய தாகம் நிறைவேறும் வரையும் அவனது காத்திருப்புத் தொடரும்.

# கணப்பொழுது



## கப்டன் கௌதமன்

**1974ம் ஆண்டு மே மாதம் 01ம் திகதி கௌதமன் அடைக்கலம் தம்பதியினருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தான். இவனுக்குப் பெற்றோர், இன்பசோதி எனப் பெயரிட்டனர். இவன் வீட்டிற்கு ஒரே ஒரு ஆண் குழந்தை என்பதனால் இவனது பெற்றோரும், சகோதரிகளும் அன்பாகப் பார்த்தனர். படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி திறமையாகவே செயற்பட்டான். இவனுக்கு துடுப்பாட்டம் மிகவும் பிடித்த விளையாட்டு. துடுப்பாட்டத்தில் இவனது திறமையைக் கண்டு சென். பற்றிக்ஸ் கல்லூரியின் துடுப்பாட்ட அணிக்குத் தலைவனாகத் தெரிவு செய்யப்பட்டான். இவன் தனது கல்லூரிக்காக துடுப்பாட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளான்.**

இன்பசோதி கிறிக்கற் மச்சுக்கு வந்தால் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்பது அவனது தோழர்களின் நம்பிக்கை. இதனால் நண்பர்கள் 'இன்பசோதி வந்து பற் பண்ணீட்டு மட்டும் போடா' என்று கேட்பார்கள். பற்றைப் பிடித்து பந்தை விளாசுவதில். கெட்டிக்காரன். அவனது திறமையை பத்திரிகைகளும் சொல்லும்.

இவ்வாறு படித்துக் கொண்டிருந்தவனுக்கு, எமது மக்களுக்கு அந்நிய இராணுவமான சிங்கள இராணுவம் செய்த கொடுமைகள் அவனது நெஞ்சத்தைத் தொட்டன. கோட்டையிலிருந்தும், மண்டை தீவிலிருந்தும் ஏவும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்து எமது மக்களை வயது வேறுபாடின்றி அழித்து, உடைமைகளை நாசமாக்குவதைக் கண்டு கொதித்தான். ஏன் நமது மக்களுக்கு இந்த அவல வாழ்வு? இப்படியே தொடர்ந்தால் எமது மக்கள் அடிமைகளாகவும், விலங்குகளாகவும் வாழ நேரிடும். நாம் போராட்டத்தில் இணையாது ஒதுங்கினால், எமது எதிர்கால இளஞ்சந்ததி எமது சொந்த மண்ணில் அடிமை வாழ்க்கை வாழ நேரிடும். எனவே இனியும் தாமதியாது சந்ததியின் வாழ்விற்காக உயிரைத் தியாகம் செய்யும் படையணியில் இணைந்து ஆயுதத்தால் அடக்கும் எதிரிக்கு, ஆயுதத்தால் பதில் சொல்ல வேண்டும் என எழுந்தான்.

ஆம், அந்த நாளும் வந்தது. 1991ம் ஆண்டு ஜூலை மாதம். இக் காலப்பகுதியில் தான் கௌதமனும் சில பாடசாலைத் தோழர்களுடன் தன்னை முழுமையாக விடுதலைப் புலிகளுடன் இணைத்துக் கொண்டான். இயக்கத்தில் இணைந்த இவன் மண்தோட்டம் ஆறாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த வேளை, பல தோழர்களுடன் அவனும் விசேட பயிற்சிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சரத்பாபு மூன்றில் பயிற்சி எடுத்தான். பாடசாலை விளையாட்டுக்களில் திறமையாக ஈடுபட்டதால் இவனுக்கு அடிப்படை பயிற்சி கடினமாக இருக்கவில்லை. பயிற்சிகளில் கிடைக்கும் சிறு ஓய்வு நேரங்களில் தன்னைச் சுற்றியிருக்கும் தனது தோழர்களை பகிடி விட்டு சிரிக்க வைத்துக் கொண்டிருப்பான். இதனால் தோழர்களும் அவனைச் சூழ்ந்தே இருப்பார்கள்.

பயிற்சி முடியும் முன்பே அவனது சண்டைக் களமும் ஆரம்பமானது. ஆம், ஆனையிறவுச் சமருடனும், சிலாபத்துறைச் சமருடனும் புலிகள் பலமிழந்து விட்டார்கள் இனி அவர்களை இலகுவில் அழித்து அடிபணிய வைக்கலாம் என நினைத்து தமிழீழத்தின் இதயமான மணலாற்றில் இராணுவ நடவடிக்கையை சிங்களப்படை ஆரம்பித்தது. புலிப்படை ஒரு போதும் பலமிழந்ததில்லை. ஒவ்வொரு சண்டையிலும் புது அனுபவம் பெற்று பலம் பெற்றே உள்ளனர் என்று துப்பாக்கிகளால் பதில் சொல்லிக் கொண்டிருந்த வேளை அந்தப் பகுதிக்கான உதவிக் குழுவில் கௌதமனும் தெரிவு செய்து அனுப்பப்பட்டான். அங்கு அவன் துணிவுடனும், திறமையுடனும் கொடுத்த வேலையைச் செய்தான்.



இவ்வேளையில் இவனுடன் இணைந்த பாடசாலை நண்பனான வீரவேங்கை வாசு வீரச்சாவடைந்ததும், முதன் முதலாக அவன் மனம் இறுகியது. இச் சண்டை முடிந்ததும் மீண்டும் பயிற்சி முகாம் சென்று தனது அடிப்படை பயிற்சியைப் முடித்தான். அடிப்படை பயிற்சி முடிந்ததும், முக்கிய பணிக்காக இவன் சில போராளிகளுடன் தெரிவு செய்யப்பட்டான்.

எனினும் இவனுக்கு சண்டைக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. இருப்பினும் கொடுக்கப்பட்ட பணி ஒரு முக்கிய பணி என்பதால் விரும்பி ஏற்றுதிறமையாகச் செயற்பட்டுவந்தான். விவரிக்க முடியாத அவன் செய்த வேலைகள் அவனுக்கே தெரியும். அப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது விடுதலைப் புலிகளால் இரண்டாவதாகப் பெயர் சூட்டி நடாத்தப்பட்ட தாக்குதலுக்குச் செல்ல பொறுப்பாளரால் அனுப்பப்பட்டான்.

தமிழீழத்தைத் துண்டாடி, சிங்களவர்களைக் குடியமர்த்தி, அவர்களுக்கு ஆயுதங்களும் கொடுத்திருந்தது சிங்கள அரசு. இவர்களுக்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட மண்கிண்டிமலை இராணுவ முகாம், தமிழர்களுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுத்தது. இத்தாக்குதலான இதயபூமி 1ல் கௌதமன் சிங்களப் படைகளுக்கு T56-2 வினால் பதில் சொன்னான். இம் முகாம் கைப்பற்றிய சண்டையின் பின், மீண்டும் பழைய பணியில் ஈடுபட்டான். 1995ம் ஆண்டு காலப்பகுதியில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. சமாதானத்தை நிலை நாட்டுவோம். அப்பாவி மக்கள் யுத்தத்தால் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள்.


சமாதானத்தை நிலை நாட்டுவோம் என்று முழக்கமிட்ட சந்திரிகா அரசு, தானும் தமிழ் மக்கள் மீது யுத்தத்தின் கோரப் பற்களைப் பதித்தது. இந் நடவடிக்கையால் தமது உடமைகளையும், உறவுகளையும் இழந்து தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தார்கள். இவன் தனது பணிகளுக்காக வன்னிக்கு மாற்றப்பட்டு, முகாம் அமைக்கும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். இவ் வேளையில் 'நான் சண்டைக்குப் போகப்போறன்' என பொறுப்பாளரிடம் அனுமதி கேட்டான். அவன் விரும்பியபடி அனுமதியும் கிடைத்தது. அவனின் நீண்ட நாள் ஆசை நிறைவேறத் தொடங்கியது. 'இனி சண்டைதான் பிடிக்க வேணும்' என்று கூறுவான். மகிழ்ச்சியுடன் சண்டைக்கான பயிற்சிக்குச் செல்லும் போது 'என்ன மச்சான், இந்தச் சண்டை முடிய பழைய வேலைக்கு வருவாய் தானே' என்று சக போராளி கேட்க, 'இனி என்ர இலக்கு வேற தானே' என்று உறுதியாகக் கூறினான்.

சண்டைக்குத் தயாரான போது கௌதமன் ஒரு பிளட்டூனுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டான். அப் பொழுது தனது சக போராளிகளுக்குச் சொன்னான். 'இப்ப ஆமி என்ன செய்வினம், தங்கட இடம் எண்டு ஓடித்திரிவினம். காம்புக்க அடி விளேக்க தான் தெரியும் இது ஆற்ற இடமெண்டு'. இரவுத் தாக்குதலுக்கு தயாரானபோது கௌதமனின் குழுவுக்கு, மற்றைய அணிக்கு உதவியாக இருக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. 18.07.1996 இரவு சண்டை தொடங்கி புலிகள் வீரத்துடன் போராடி முல்லை முகாமைக் கைப்பற்றினர். ஓடிய படையினரை புலிகள் தேடி அழித்தனர்.

19ம் திகதி காலை வானொலியில் முகாம் புலிகளிடம் வீழ்ந்தது என்று கூறக்கேட்டு, துள்ளிக்கொண்டு சந்தோசத்திலிருந்தான். இதன் பின் அன்று கடற் கரையில் எதிரிப்படை தரையிறங்காது தடுக்க இவனது பிளட்டூன் அனுப்பப்பட்டது. அவ்வேளை முகாமை இழந்த சிங்களத் தலைமை அதனைக் கைப்பற்ற கடலாலும், ஆகாயத்தாலும் படைகளைத் தரையிறக்கியது. உயரத்தே பறந்த கெலியை 'கொஞ்சம் பதிஞ்சுவா' என்று சிரித்துக் கொண்டு கூறினான். அன்றே தரையிறக்கிய படையுடன் உக்கிர சண்டை தொடங்கியது. தரையிறக்கிய படையினருக்கு கௌதமனின் கையிலிருந்த ஏ.கே பதில் சொன்னது. ஆம், ஆவேசத்துடன் எதிரிகளைச் சல்லடையாக்கிக் கொண்டிருந்தான்.

சிங்கள அரசுக்கு அது ஒரு பயங்கர அடிபோல் இருந்தது. வீரத்துடன் முழக்கமிட்டுக் களமாடிக் கொண்டிருந்த கௌதமனின் மார்பில் எதிரியின் ரவையொன்று துழைத்தது. அந்தக் கணப்பொழுது எந்த மண்ணை நேசித்தானோ, அந்தத் தமிழீழ மண்ணை தனது குருதியால் கழுவி முத்தமிட்டான். எனினும் அவன் வளர்த்த போராளிகள் அவனது இலட்சியத்தினையும் ஆயுதத்தினையும் சுமந்து கொண்டு அவனது பாதச் சுவட்டிலே தொடர்கின்றனர். தமிழீழம் மலரும் வரை பயணம் தொடரும்.

எழுதியவர்-
**போராளி பரிமேலழகன்**



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்
### அத்தியாயம் முப்பது

தொடர்ச்சி...

பிரத்தியேகச் செய்தி! 1946ம் ஆண்டின் டேவிட் எதிர் கோலியாத் யுத்தம், மார்க் பார்க்கர், அமெரிக்கன் நியூஸ் சிண்டிகேட், கைரேனியா — சைப்பிரஸ்.

நான் இந்த அறிக்கையைக் கைரேனியாவில் இருந்து எழுதுகிறேன். கைரேனியா பிரிட்டிஷ் குடியேற்ற நாடான சைப்பிரசின் வட கரையோரமாக இருக்கும் அணிகலன் போன்ற ஒரு சிறிய துறைமுகமாகும். சரித்திர நிகழ்வுகளால் சைப்பிரஸ் நிறைந்திருக்கிறது. டம்பமான கடந்த காலத்தின் மிச்சம் மீதிகளால் சலாம்சின் சிதைவுகளில் இருந்து பமாகுஸ்ராவின் பேராலயம் வரைக்கும், நிக்கோசியாவிலிருந்து சிலுவை யுத்த வீரர்களால் புகழ்பெற்ற கோட்டைகள் வரை இந்தத் தீவு நிறைந்திருக்கிறது. ஆனால் இந்த அட்டகாசமான சரித்திர நிகழ்வுகள் எல்லாம் இப்போ, இந்த அமைதியான அதிகம் பிரபல்யப்படாத உல்லாசப் பயண நகரில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நாடகத்தின் காட்சியின் கனதிக்கு உறை போடக் கூடக் காணாது.

பலஸ்தீனத்துக்குள் செல்ல பிரிட்டிஷார் விதித்திருக்கும் தடையை உடைக்க முயலும், யூத அகதிகளின் தடுப்புக் காவல் மையமாக இப்போ சில மாதங்களாக சைப்பிரஸ் இருந்து வருகிறது.

இன்று, இதுவரை எப்படி என்று கண்டுபிடிக்கப்படாத வகையில், கராஒலொஸ்ஸில் இருந்து தப்பி வெளியேறிய, பத்து வயதிற்கும், பதினேழு வயதிற்கும் உட்பட்ட சிறுவர்கள் முந்நூறு பேர், தீவின் குறுக்காக கைரேனியாவுக்கு விரைந்துள்ளனர். இங்கே உருமாற்றம் செய்யப்பட்ட 200 டன் அளவான இழுவைப்படகு அவர்களைப் பலஸ்தீனத்துக்கு அழைத்துச் செல்லக் காத்துக் கொண்டிருந்தது.

அநேகமாகத் தப்பிச் சென்ற எல்லா அகதிகளும், ஜேர்மன் தடுப்பு முகாம்கள், இன அழிப்பு முகாங்களில் இருந்து தேர்ச்சி பெற்றவர்களாகும். பொருத்தமான முறையில் எக்ஸோடஸ் என்று மீளப் பெயரிடப்பட்ட இந்த இழுவைப் படகு அது துறைமுகத்துக்கு வெளியே செல்ல முதலே, பிரிட்டிஷ் புலனாய்வுத்துறையால் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது.

அதில் ஏறியிருக்கும் முந்நூறு பிள்ளைகளுடன், கிட்டத்தட்ட முந்நூறு யார் மட்டும் விட்டமுள்ள துறைமுகத்தின் நடுவே நங்கூரமிடப்பட்டு உள்ளதோடு, பிள்ளைகளை இறக்கி கராஒலொஸ் திரும்பவைக்கப் பிரிட்டிஷ் எடுக்கும் முயற்சிகளுக்கு இடம் கொடுக்காமலிருக்கிறது.

எக்ஸோடஸ் சார்பில் குரல் தரவல்ல ஒருவர், கப்பல் டைனமைற்றால் நிரம்பி இருப்பதாகவும், பிள்ளைகள் எல்லோரும் மனம் ஒப்பி, தற்கொலை ஒப்பந்தம் ஒன்று செய்திருப்பதாகவும், பிரிட்டிஷார் கப்பலில் கால் வைக்க முயன்றால் கப்பலைத் தகர்த்துவிடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

லண்டன்.

ஜெனரல் சேர் ரெவர் பிறவுண் செய்திப் பத்திரிகைப் பிரதியைத் தன் மேசை மேல் போட்டார். அவர் ஒரு சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டு, அறிக்கைகளை வாசித்தார். மார்க் பார்க்கரின் அறிக்கை ஐரோப்பாவில் மட்டுமல்லாது அமெரிக்காவிலும் பரபரப்பூட்டிக் கொண்டிருந்தது. எக்ஸோடசை ஏறிக் கைப்பற்றும் அறிக்கையை விடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்ட சுதர்லாண்ட், அறிவுறுத்தல்களைக் கேட்டு கோரிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார். இந்தப் பழி தனக்குத்தான் வரப்போகிறதென்று அவருக்குத் தெரிந்திருந்தது. கொமாண்டர் பதவிக்கு சுதர்லாண்டை தானே தெரிந்தெடுத்திருந்தார். அத்தோடு சுதர்லாண்டை மாற்றாவிட்டால் ஏதாவது விபரீதமாக நிகழ்ந்துவிடும் என்று எச்சரித்து அலிஸ்ரர் எழுதியிருந்த கடிதத்திற்கும் ஏதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஹம்ப்ரி கிறோபோர்ட் (Humphrey Crawford) ரெவர் பிறவுணின் காரியாலயத்திற்குள் பிரவேசித்தார். கிறோபோர்ட் குடியேற்றக் காரியாலயத்தின் மத்திய கிழக்குப் பிரிவில் கடமையாற்றும் ஒரு உப்பிய முகமுடைய அதிகாரி அவர், இராணுவத்துக்கும், வைற்ஹோல் கொள்கை வகுப்பாளர்கட்கும், சதாம் ஹவுசிற்கும் தொடர்பு அலுவலராகப் பணியாற்றினார், 'மாலை வந்தனம் சேர், கிளெரென்ஸ்.' சிறிது குழப்பமான குரலில் கூறிய அவர் தொடர்ந்து பிராட்ஷாவுடனான எமது கூட்டத்துக்கு நேரமாகிவிட்டது என்றார்.

ரெவர் பிறவுண் எழுந்து சில ஆவணங்களை சேர்த்தெடுத்துக் கொண்டார். 'ஆமாம் செசில் பிரட்ஷா கிழவனைக் காத்திருக்க வைக்கக் கூடாது.'


செசில் பிரட்ஷாவின் காரியாலயம், சதாம் ஹவுசிலிருந்த சர்வதேச உறவுகள் நிலையத்தில் (Institute of the International Relations) இருந்தது. கடந்த முப்பது வருடங்களாக, பிரிட்டனின் மத்திய கிழக்குக்கான கொள்கை வகுப்பு உயர் மட்டக்குழுவில் அவரும் ஒருவர்.

முதலாம் உலக யுத்த முடிவில், பிரிட்டனும் பிரான்சும் மத்திய கிழக்கில் செல்வாக்கு செலுத்த முனைந்தன. பலஸ்தீன பிரச்சினை உருவானபோது, வின்ஸ்ரன் சேர்ச்சில் (Winston Churchill) - பிரித்தானியாவின் புகழ்பெற்ற போர்க்காலப் பிரதமர்) கூட பலஸ்தீனத்தின் அரைவாசியில் அரபு நாடொன்றை ஸ்தாபிக்கத் தூண்டியவர்களில் ஒருவராயிருந்தார். அவர்கள் ஸ்தாபிக்க

## லியோன் யூறிஸ்

உதவிய நாட்டின் பெயர் ட்ரான்ஸ் — ஜோர்டான் (Trans Jordon) ஆகும். இந்த நாட்டை உருவாக்குவது, அதனை ஒரு பிரிட்டிஷ் இராணுவத் தளமாக மாற்றியமைப்பதை முழு நோக்கமாகக் கொண்டிருந்தது. பிரித்தானியாவின் மானியங்கள், பிரிட்டிஷ் அரபு இராணுவத்தை நிறுவவும் ட்ரான்ஸ் — ஜோர்டானுக்கு ஒரு அரசனைத் தெரிவு செய்யவும் உதவின. இந்த இராணுவம் அராப் லீஜன் (Arab Legion) எனப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட அரசன் ஹசிமிட் அராப் அப்துல்லா (Arab Abdullah) ஆகும். இவர் சவூதி அரேபியாவின் சவுட் அரசருக்குப் பரம விரோதியானவராகும்.

இரண்டாவது உலக மகாயுத்த முடிவில், ஐரோப்பாவில் தப்பிப் பிழைத்திருந்தவர்கட்குப் புகலிடமாகவும், பலஸ்தீனத்தில் யூதர்கட்கான தாயகம் ஒன்றை அமைப்பதான வாக்குறுதிகள் உட்படப் பல வாக்குறுதிகளை வழங்கியபடி தொழிற்கட்சி பிரிட்டனில் பதவிக்கு வந்தது. இந்த வாக்குறுதிகள் கேட்பதற்கு அழகாக இருந்தாலும் நடைமுறையில் நிறைவேற்றப்பட முடியாதவை என்றும் பிரிட்டனின் நலன்கள் பாதுகாக்கப்பட்ட அரபு சார்பாகச் செயல்பட வேண்டியதவசியம் என்றும் புதிய வெளியுறவு மந்திரியை வழிநடத்திய பலம் வாய்ந்த சதாம் ஹவுஸ் குழுவிற்கு செசில் பிராட்ஷா தலைமை வகித்தார். அரபுக்களின் ஒரு கோடி சதுரமைல் (Ten Million Square Miles) பிரதேசம் எண்ணெய்வளம்



கொண்டதாயிருந்ததோடு, முக்கியமான கால்வாய் ஒன்றையும் கொண்டிருந்தது.

ஜெனரல்சேர் கிளெரன்ஸ்ரெவரும், ஹம்ப்றி கிறோபேர்ட்டும் செசில் பிரட்ஷாவின் காரியாலயத்துள் அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் தன் அறுபதுகளில் பருமனாகக் காட்சி அளித்தார். இவர்கள் சென்றபோது கவரைப் பார்த்தபடி இவர்களுக்கு தன் பின்பக்கத்தைக் காட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தார். அவருடைய பருமனான கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. ஹம்ப்றி கிறோபேர்ட் சிறிது பதற்றத்துடன் கதிரையின் முன் நுனியில் அமர்ந்துகொண்டிருந்தார். ரெவர் பிறவுண் ஆழமான தோல் இருக்கையொன்றில் வசதியாக அமர்ந்து சுருட்டொன்றைப் பற்ற வைத்துக் கொண்டார்.

'பாராட்டுக்கள் நண்பர்களே' கேலி தொனிக்கும், கோபத்தால் சிறிது நடுங்கிக் கொண்டிருந்த குரலில் சுவரைப் பாரர்த்துச் சொன்னார். 'இன்று நாம் செய்திகளில் அடிபட்டுக் கொண்டிருக்கிறோம்.' வட்டமாக உருப்பெற்றிருந்த தனது வயிற்றை தட்டியபடி திரும்பிச் சொல்லிவிட்டுச் சிரித்தார். 'நீங்கள் நான் சுகமாக குளியலறை நுரையில் திளைத்துக் கொண்டிருப்பேன் என்று எதிர்பார்த்தீர்களா, இல்லை அன்பர்களே இல்லை. காலையில் வைற்ஹோலில் இருந்து அழைப்பு வந்தது. எதிர்பார்த்தபடியே அமைச்சர் இந்த எக்ஸோடஸ் விசயத்தில் என்னைத்தான் குற்றம் சாட்டினார்.' பிராட்ஷா மேசையின் முன் அமர்ந்து, அறிக்கைகளில் ஒருமுறை பார்வையைச் செலுத்திவிட்டு, விரைவாக தனது கொம்பில் செதுக்கப்பட்ட பிரேம்களை (Horn Rimmed Glasses) உடைய மூக்குக் கண்ணாடியை வெடுக்கெனக் கழற்றினார். 'சேர். கிளெரன்ஸ், சொல்லுங்கள். உங்களுடைய புலனாய்வுப் பிரிவு இல்லாமல் போய்விட்டதா? அல்லது ரெனிஸ் விளையாடப் போயிருந்ததா? அந்த சுதர்லண்ட் விசயத்திலும் நீங்கள் விளக்கம் தரவேண்டும் என நான் நினைக்கிறேன். அவர் நீர் தெரிவு செய்த ஆள்தானே' என்றார்.

ரெவர் பிறவுண் பயமுறுத்தப்பட மறுத்தார். சைப்பிரசில் முகாங்களை நிறுவுவது உங்கள் ஆலோசனைகள் தான். உங்களுடைய விளக்கம் என்ன?

'கனவான்களே!' கிறோபேர்ட் ஒரு மோதலைத் தவிர்க்கும் விதத்தில் விரைவாகக் குறுக்கிட்டார், நாங்கள் இந்த எக்ஸோடஸ் விசயத்தில் ஒரு வினோதமான பிரச்சினையில் மாட்டிக்கொண்டிருக்கிறோம். இந்தமுறைதான் இப்படியான விசயத்தைப்பற்றி பிரச்சாரம் அமெரிக்கப் பத்திரிகைகளை எட்டியிருக்கிறது.'

பிராட்ஷா ஒரு இழுவையோடு கூடிய சிரிப்பொன்றை உதிர்த்தார். அவருடைய அப்பிள் போன்ற கன்னங்கள் இன்னும் சிவந்தபடி, 'போர்முடிவில் பத்தாயிரம் யூதர்களை மட்டுமே நாட்டுக்குள் அமெரிக்கர்கள் அனுமதித்திருக்கிறார்கள். இவ்வளவு கதைக்கும் ட்ருமனின் சாதனை இவ்வளவுதான். பலஸ்தீனம் பென்சில்வேனியாவில் இல்லாதவரை, ட்ருமன் நிச்சயமாக சியோனிசத்தின் ஆதரவாளர்தான் எல்லோரும். இலட்சியப் பேச்சுக்களைப் பேசலாம். ஆனால் எங்களின் மத்திய கிழக்குச் செல்வாக்கை நாசமாக்கக் கூடிய 10 இலட்சம் யூதர்கள் எங்கள் தலையில் தான் இருக்கிறார்கள்.' சொல்லிவிட்டு பிராட்ஷா தன் மூக்குக் கண்ணாடியைத் திரும்பவும் அணிந்து கொண்டார். ஸ்டார் ஒவ் டேவிட், மோசெஸ், பால்மாக், கேற்ஸ் ஒவ் சியோன், டோடர் ஒவ் ஹோப் எக்ஸோட் இந்த சியோனிஸ்டுகள் மிகப் புத்திசாலிகள், நாங்கள் நினைத்திருக்காத பல அர்த்தங்களை பலஸ்தீன தீர்மானத்திலும், பல்போர் பிரகடனத்திலும் காண்பிக்க முயலுகிறார்கள். அவர்கள் விவாதம் செய்து, ஒரு ஒட்டகத்தை, ஒரு கோவேறு கழுதை என நினைக்கப் பண்ணிவிடுவார்கள். என்னுடைய கடவுளே, இரண்டு மணித்தியாலங்கள் தான் அந்த செயிம் வெயிஸ் மான் — யூதத்தலைவர் உடன் கதைத்தேன். கிட்டத்தட்ட எனக்கே, சியேனிஸ்ட் இயக்கத்தில் சேரவேண்டும் போல் இருந்தது.' மூக்குக் கண்ணாடியை மீண்டும் கழற்றியவர் 'உங்கள் அனுதாப அலையின் திசை எங்களுக்குத் தெரியும் ரெலர் பிறவுண்' என்றார்.

'இந்த வார்த்தைகளின் கருத்தை நான் ஆட்சேபிக்கிறேன். பிராட்ஷா நாங்கள் ஒரு பலமான யூத நாட்டை பலஸ்தீனத்தில் கட்டி எழுப்புவதன் மூலமே எங்கள் நலன்களை மத்திய கிழக்கில் பாதுகாக்கலாம் என்று சொல்லும் ஆட்களில் நானும் ஒருவன். யூதர் நலன்களைப் பற்றி இதில் நான் கருதவில்லை, பிரிட்டனின் நலனையே கருத்தில் எடுக்கிறேன்.'

தொடரும்...

# இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

## அன்புச் சகோதரமே!

போர்த்துக்கேயர் எமது தமிழீழத் தாயகத்தின் மீது படையெடுத்த பொழுது அன்றைய தமிழீழ அரசான யாழ்ப்பாண அரசின் மன்னனான முதலாம் சங்கிலி ( கி.பி. 1519-1561) தலைநகரைப் பாதுகாக்க 12000 இற்கு மேலான போர்வீரர்களை நிறுத்தியிருந்ததாக குலேறோஸ் என்னும் கத்தோலிக்க குருவினுடைய வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. சிங்கள வரலாற்று நூலான ராஜாவலிய இலங்கை அரசர்களுள் யாழ்ப்பாண அரசர்கள் பொருட்பலமும் படைபலமும் கொண்டு திகழ்ந்தனர் என எடுத்துரைக்கிறது. இந்நூலும் மற்றொரு சிங்கள நூலான நிகாய சங்கிரகயவும் யாழ்ப்பாண அரசர் கம்பளை அரசனை கடற்படை கொண்டு தாக்கி நீர்கொழும்பு, சிலாபம், வத்தளை, கொழும்பு, தெமட்டக்கொடை போன்ற இடங்களைக் கைப்பற்றியதாகக் கூறி யாழ்ப்பாண அரசர்களின் கடற்படை வலிமை குறித்துப் பேசுகின்றன. இதற்கு முன்னரே 1344 அளவில் இலங்கைத் தீவுக்கு வந்த இவுன்பற்றுற்ரா பாண்டிய நாட்டுக் கரைக்குச் சென்றபொழுது அங்கு யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் பல்வேறு அளவிலுள்ள நூற்றுக்கணக்கான நவாய்களைத் தான் கண்டதாகவும் அவை யெமன் நகர் நோக்கி வர்த்தக கடற்பயணங்களில் ஈடுபட்டு இருந்ததாகவும் எழுதியுள்ளார். முத்து, கறுவா போன்ற வர்த்தகத்தில் யாழ்ப்பாண அரசர்கள் மத்தியதரை நாடுகளுடன் ஈடுபட்டிருந்தனர் எனவும் இதற்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் யாழ்ப்பாண அரசர்கள் பலம்பொருந்திய கடற்படையினை வைத்திருந்தனர் எனவும் வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக யாழ்ப்பாண அரசு நன்கு பலம்பொருந்திய பாதுகாப்பு படையினைத் தன்னகத்தே கொண்டிருந்ததினால்தான் 1505 இல் இலங்கைத்தீவில் கால்வைத்த போர்த்துக்கேயர் சிங்கள கரையோர அரசுகளைக் கைப்பற்றிய போதிலும் 1621 வரை 116 ஆண்டுகள் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்ற முடியாமல் திணறினர்.

ஆனால் இந்த பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கும் நிலை காலனித்துவ காலத்தில் குறிப்பாக பிரித்தானியா ஆட்சியில் தங்கி வாழும் நிலைக்கு மாற்றப்பட்டது. பிரித்தானியா காலனித்துவ நாடுகளுக்கு என உருவாக்கிய கல்வி அமைப்பில் மன்றாட்டுக்கள் - விண்ணப்பங்கள் - பேச்சுவார்த்தைகள் மூலம் காலனித்துவ மக்கள் தமது பிரச்சினைகளை முன்னெடுக்கும் போக்கு புகுத்தப்பட்டது. இதன் வழியாக மக்கள் எழுச்சிகள் போராட்டத் தன்மையுள்ளதாக மாறும் நிலையினை பிரித்தானியா தவிர்த்துக் கொண்டது. இந்த மன்றாடிப் பெறும் பெருங்குணத்தை பெரும்பான்மை ஆட்சிகளை பிரித்தானியா நிறுவிய பொழுது பெரும்பான்மை அரசாங்கங்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி பெரும்பான்மையினர்கள் சொல்வதைக் கேட்கும் மக்களாக சிறுபான்மையினர் வாழ்தல் வேண்டும் - சிறுபான்மையினங்களுக்கு வழங்கப்படுபவை எல்லாம் சலுகைகளே தவிர உரிமைகள் அல்ல - என்பன போன்ற போக்குகளை தமது அரசாங்கங்களின் நிலைப்பாடாக மாற்றிக் கொண்டன. அத்துடன் தேச இனங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, கூட்டுறவில் இயங்கவேண்டிய ஜனநாயக ஆட்சியை சிறுபான்மை - பெரும்பான்மை இனங்களிடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் திணிக்கும் சட்டகமாக பெரும்பான்மையினர் மாற்றிக் கொண்டனர். தேச இனங்களுக்கு இடையில் சுமூகமான உறவுகள், பகிர்வுகள் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டிய அரசியல் சாசனங்களை பெரும்பான்மையினத்தின் இறைமையை - சட்டவாக்கத்தை - சட்டஅமுலாக்கத்தை மற்றைய இனங்கள் மேல் திணிப்பதற்கான ஊடகமாக பெரும்பான்மையினர் மாற்றிக் கொண்டனர். இவைகளின் வழியாக பலவிதமான நவகாலனித்துவ ஆட்சிகள் காலனித்துவத்தில் இருந்து விடுதலைபெற்ற நாடுகளிடை தலைதூக்கியதினாலேயே 1960 களை அடுத்து சுயநிர்ணய உரிமை குறித்த ஐக்கிய நாடுகள் சபை சாசனங்கள் மரபுகளை அமுலாக்குவது தொடர்பான செயலாக்கங்களில் ஐக்கிய நாடுகள் சபை வேகமாக இறங்கியது. இவை நவகாலனித்துவத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடை புதிய நம்பிக்கைகளை தோற்றுவித்ததினாலேயே நவகாலனித்துவத்திற்கு உட்பட்ட நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வளர்ச்சி பெற்றன.

இவ்வகையிலே நவகாலனித்துவ ஆட்சியாக மட்டுமல்லாது தெளிவான இனஅழிப்பு, இனத்துன்புறுத்தல் ஆட்சியாகவும் மாறிவிட்ட சிறீலங்கா அரசாங்கத்தில் இருந்து விடுதலை பெற்று தங்கள் தமிழீழத் தாயகத்தில் மீளவும் தனியரசமைத்து அதன் மூலம் தமக்குப் பாதுகாப்பான அமைதி வாழ்வை உருவாக்க தமிழீழ மக்களும் தங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து 1972 முதல் இன்று வரை 27 ஆண்டுகளாக தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை தங்கள் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் நடாத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழீழத் தேசம் தன் தேசிய விடுதலையை அடைந்து கொள்வதற்கு முன்னர் போல் மீளவும் வலிமையான தமிழீழத் தேசிய பாதுகாப்பை உருவாக்கி அதனை மேலும் மேலும் பலப்படுத்தி வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தரை வழி, கடல் வழி இராணுவ ஆற்றல்கள் உலக இராணுவ நிபுணர்களால் போற்றப்படும் அளவுக்கு தமிழீழத் தேசிய பாதுகாப்புத் தன்மை வலிமைபெற்றுள்ளது. இனிமேல் வான் வழி ஆற்றல் முழுமைபெறுவதன் மூலமே தமிழீழத் தாயகத்தில் நிலை கொண்டுள்ள ஆக்கிரமிப்புப் படைகள் எங்கள் தாயகத்தின் தரை - கடல் - ஆகாய எல்லைகளில் இருந்து ஓட விரட்டியடிக்கப்படுதல் விரைவு பெறும் என்பதை தமிழீழப் புலம்பெயர் மக்களாகிய நாம் தெளிவாக உணர்கின்றோம். ஆதலால்தான் தமிழீழப் புலம்பெயர் மக்கள் தங்கள் தாயக விடுதலைக்காக நாள் ஒன்றுக்கு ஒரு மணிநேர உழைப்பை தந்துதவும் புனிதப் பணியில் இறங்கியுள்ளனர். அதே நேரத்தில் சிறீலங்கா அரசின் இனஅழிப்பு, அரசியல் செயல்திட்டங்களின் இனத்துன்புறுத்தல் செயற்பாடுகளினால் தங்கள் வாழ்வை இழந்து ஆதரவு தேடும் மனிதர்களாக உணவு - உடை - உறைவிடம் - மருத்துவம் - கல்வி போன்ற அடிப்படை மனிதத் தேவைகள் சிறீலங்காவால் தடைசெய்யப்பட்ட நிலையில் சீறும் இயற்கையுடன் பரவும் நோய்களுடன் நாளாந்த உயிர் வாழ்தலுக்காக துடிக்கும் எங்கள் சகோதரங்களின், தாய் தந்தையரின் நல்வாழ்வுக்காக துயர்துடைக்கும் கரங்களாகவும் திகழ வேண்டிய பொறுப்பு எம்முடையதாக உள்ளது. இதனை கவனத்தில் எடுத்து எமது உடன்பிறப்புக்களின் துயர்தீர எம்மால் இயன்றதைச் செய்வோம்.

**அன்பின் ஆசிரியர்**
**(01.07.1999)**

(4–ம் பக்கத் தொடர்ச்சி)

## இனி வெல்வது எம்முறை

இந்தப் பின்னணியில்தான் எம்மக்கள் உலகின் மனச்சான்றை உலுக்கத் தொடங்கியுள்ளனர். புதிய நூற்றாண்டிற்குள் புத்துணர்வோடு உலகம் பிரவேசிக்க ஆயத்தமாகையில் வரலாற்றின் பாவச்சுமைகளை சுமந்து பின்நோக்கி முன்னேறும் சேர்பியரைக் கடுமையாக தண்டிக்கும் உலகம் அதே பாவச் சுமைகளை சுமக்கும் சிங்களப் பேரினவாதிகளுக்கு துணைபோவது ஏன்? இக்கேள்வியை மட்டுமே எம்மக்கள் எழுப்புகின்றனர். ஏனெனில் சிங்களப் பேரினவாதிகளைத் தண்டிக்கும் பொறுப்பை அவர்கள் தம் கையில் எடுத்துவிட்டனர். எம் மக்களின் விடுதலையுணர்வின் உளவுறுதியின் வெளிப்பாடாக துலங்கும் எம் தலைவர், அதனாலன்றோ உலகைப் பார்த்து இவ்வாறு சொல்கின்றார்.

''வாழ்வது ஒரு முறை
வருவது எம்முறை
வெல்வது இம்முறை''


# செஞ்சோலைக் கலைமாலை



சிறீலங்கா அரசின் கொடூரமான போர் அனர்த்தங்களால் தமது பெற்றோரை, உறவுகளை இழந்து நிற்கும் இந்தப் பிஞ்சுகள் நாளைய எமது தமிழீழ தேசத்தின் நம்பிக்கை விண் மீன்கள். இவர்கள்...... இன்று..... சிறகடித்துப் பறந்து திரியும் முற்றந்தான் செஞ்சோலை

**17.07.1999 சனிக்கிழமை**
**மாலை 6.00 மணி**
**Concert Hall - Fairfield**
**Park Lane, Croydon, Surrey.**

செஞ்சோலை

***நிகழ்ச்சிகள்:***



- ★ இன்னிசை விருந்தும் எழுச்சிகானமும்
- ★ சுவிஸ் கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும் பாலம் சொல்லும் நீதி
- ★ அரங்க வெளிப்பாடு

இன்னும் பல நிகழ்ச்சிகளுடன்.

தமிழ்ப் பெண்கள் அமைப்பு - லண்டன் - 0171 403 4554


(5–ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னிக்களத்தில் புலிகளும் தேர்தல்களத்தில் 'ரணகோஷ'வும்

புலிகளின் பீரங்கிப்படையணியின் அபரிமிதமான ஆற்றல் வன்னிச்சமர்க் களத்தின் தீர்மானத்திற்கு புலிகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும். புலிகளின் இத் தாக்குதலால் இராணுவத்தரப்பு முன்பிருந்த திட்டத்தைக் கைவிட்டு பூவரசம்குளத்திலிருந்து மடுவீதியூடாக மடுவிற்கு முன்னேறும் முடிவை எடுத்தது. முன்னேறும் இராணுவத்தை ஆள் இழப்பற்ற வகையில் தடுத்து நிறுத்தி தாக்கியழிக்கும் திட்டத்தோடு நடவடிக்கைக்காக எமது அணிகள் ஏற்பாட்டு வேலைகளில் இறங்கின.

மடுத்தளத்தின் பேராயர் வணபிதா இராயப்பு யோசப் அடிகளார் களமுனைத் தளபதியிடம் "மடு ஒரு புனித தலம் இந்த மடுப்பிரதேசத்தின் சுற்றுச் சூழலில் ஒரு தாக்குதல் நடவடிக்கையால் இரத்தக்களரி ஏற்படுவது நல்லது அல்ல. இதைத்தவிர்க்கவும்" என்று கேட்டதற்கு இணங்க எமது தலைவரின் பணிப்பின்பேரில் எமது அணிகள் தாக்குதல் திட்டத்தைக் கைவிட்டு மடுப்பிரதேசத்தைவிட்டு பின்வாங்கின.

இப்போது இராணுவம் மடுப்பிரதேசத்தை ஆக்கிரமித்து மடுப்புனிதத் தலத்திற்கு பங்கம் விளைவித்து வருவதாக பேராயர் குரல் கொடுக்கிறார். ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இதுபற்றி மகஜர் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் அரசோ புலிகள் மீதான மாபெரும் வெற்றியாக இதைக் கூறிக்கொண்டது. கிறிஸ்தவர்களின் மதவழிபாட்டு உரிமையை பெற்றுக் கொடுத்ததாக பீற்றிக்கொண்டது.

ஆனால் ஆக்கிரமிப்பின் முன்பு இத் தேவாலயத்திற்கு எவரும் வந்து தொழுகை நடத்தவோ, மதநடவடிக்கையில் ஈடுபடவோ சிங்கள மக்களுக்குக் கூடப்புலிகள் என்றும் தடைவிதித்ததில்லை.

இவ்வாறிருக்க மடுப்பிரதேச ஆக்கிரமிப்பைப் புலிகள் மீதான வெற்றியாகவும் புனித தலத்தை மீட்டதாவும் அரசு கூறுவதில் அர்த்தம் என்ன இருக்கிறது. தேர்தலுக்கான வாக்குத் திரட்டல் என்ற நோக்கத்தைத் தவிர,


"ரணகோஷ" நடவடிக்கையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் புலிகளின் "விசேட தாக்குதல்அணி" இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இப்பகுதிகளில் மட்டும் மே 14 வரையிலான நாட்களில் மொத்தம் 85 பேரை இராணுவ தரப்பு இழந்துள்ளது. இதில் 49பேர் மன்னாரிலும் மிகுதிப்பேர் வவுனியாப் பிரதேசத்திலும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான களநிலைமைகளில் தேர்தல் வெற்றிக்காக செய்யப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் வருங் காலத்தில் சந்திக்க இருப்பது என்ன? இந்த நடவடிக்கையால் வன்னிச்சமர்க் களத்தில் புலிகள் ஏற்படுத்தப்போகும் மாற்றம் என்ன? இராணுவமும் அரச தரப்பும் இதைப் பொறுத்திருந்துதான் கண்டு கொள்ளவேண்டும்.


# வெளிவந்து விட்டது

வாழ்வின் சுவடும் - நம் சமகாலத்தின் உண்மை முகமும்

**ஒளிவீச்சு** 98 ஓகஸ்ட், செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர்



அனைத்து தொடர்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்
வெளியீடு: நிதர்சனம் தமிழீழம்
மீள்வெளியீடு: அனைத்துலகச் செயலகம், தமிழீழ விடுதலைப் புலிகள்

# ஓயாத கால்கள் வருக

இளமை திரும்பிய மனிதராய்
இறுமாப்புடனெழுகிறோம்.
முளைக்குள் அடர்ந்த
முதிர்வுத் திரைகிழித்து
மூசும் கடலாயெழுகின்றோம்.
கால் நூற்றாண்டுக்
காலப் பெருவெளியில்
ஓயாதொலித்த வேதம் படித்தபடி
வேக மனிதராய் நிமிர்கிறோம்.
வெற்றியினில் திளைத்து
தோல்விக்கு முடங்கியமும்
மூட மனிதரல்ல.

பின்னின்ற காலத்தின்
பிழைகளென்ன திறனாய்ந்து
எம்மைப் புடம் போட்டு
பட்டை தீட்டி நிதம்
முன்னோக்கப் படியமைத்து
வைக்கும் அடிபிசகா
காலெடுத்து வைக்கின்றோம்.
வெற்றித் தேரிழுத்து
எம் வீதி கொணர்ந்துலாப் போய்
எட்டிய சிகரங்கள்
வெற்றிக்கு முன்னுரைதான்
மீண்டும் செல்கின்ற
வழியைச் செப்பனிட
ஆயிரம் ஆயிரமாய்க்
கரம் இணைந்தோம்.

வானம் பொழிகின்ற மாரி
வயல் நிலத்தில் பயிர் செழிக்க
நாணல் நிமிர்ந்து நின்று
வீரப்பண்ணிசைக்க
மானத்திரு மைந்தர்
மனங்கொள் உணர்வெழுந்து
கார்த்திகைத் தீபமுடன்
கண்ணெதிரே தெறிக்கிறது.

தீச்சுடர்கள் மூண்டு
நெஞ்சுள்ளெரிகின்றது.
தாய் நிலவேருக்குத் தண்ணீரிறைத்தவரை......
மான நெருப்புக்கு
உயிர் நெய்யைச் சொரிந்தவரை.......
கானகத்துள் நின்றெம்
கருமையழித்தவரை.....
ஈனர் என்றெண்ணி
எமனாகி வந்தவரை,

உந்தியில் தீயெரித்தெம்
உயிர்ப்புலகைச் சிந்தித்தவரை,
வந்த சுவடோடு
வானுலகு அனுப்பிவைத்து,
மீண்டுமெம் பூமி

செழுமையுறச் சரிந்தவரை......
சிந்தையில் நிறுத்தித் தொழுகின்றோம்.
வீரம் மடிந்திறக்கா
மானத் திருவுலகாய் எம்
திருநாட்டைத் திருத்திய புதல்வர்களை
முண்டெரியும் சுவாலையிடை
தேடுகின்றோம்.

கண்களில் வழிந்தநீர்
நெஞ்சியடையிறங்கி
நெருப்பாக மாற்றி
விழிகளில் வியாபித்து விரிகிறது.

அலையில் குளித்து
அகம் புனிதமாகிறது.
கைகள் மேலுயர
தாயக வேதத்தை
உரத்தே வாய்கள் உச்சரிக்க
புதிதாய்ப் பிறந்த மனிதரானோம்.
மீண்டும் இளமை திரும்பிய
மனிதராய் எழுகின்றோம்.

காலத்தாயே!
களிப்புறு நாளழிந்து
கட்டுண்டு கிடக்குமெம்
தமிழீழ மாதாவே!

வந்தேறு குடிகளென்று
வாய் கூசாதுரைத்தவரின்
வன் நெஞ்சப் படைவாழும்
குகைகளெரித்து
புதிய காலத்தைப் பிரசவிக்கப்
பிரபாகரனென்ற பிரளயவேரின்
பிளம்புகளாய் நாங்கள் எழுகின்றோம்.
வந்துதிக்கும் ஆண்டின்
கரங்களிலே வெற்றியினை – இனி
ஓயாதள்ளிக்குவிப்போம்.

– அம்புலி –